வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 05.10.2023 வியாழக்கிழமை | இதழ் : 299 | பக்கங்கள் : 12




# நீதிபதி சரவணராஜாவுக்கு நீதி கோரி நேற்று யாழ்ப்பாணத்தில் மனித சங்கிலிப் போர்!

## அரசியல் கட்சித் தலைவர்கள், சட்டத்தரணிகள் திரண்டனர்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 05

**முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குக் கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையிலும், தமிழ்பேசும் மக்களை இலக்குவைத்துத் தொடரும் பேரினவாத அடக்குமுறைகளுக்கு எதிராகவும் யாழ்ப்பாணத்தில் நேற்று மனித சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

மருதனார்மடத்தில் ஆரம்பித்து யாழ்ப்பாணம் நகர் வரையான போராட்டமாக இது நடைபெற்றது.

இந்தப் போராட்டம் மருதனார்மடம் சந்தியில் காலை 9:30 மணியளவில் ஆரம்பமானது. சமநேரத்தில் கொக்குவில், கோண்டாவில் போன்ற பகுதிகளிலும் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழ மக்கள் புரட்சிகர

11





## திடீர் பணிப்புறக்கணிப்பால் ரயில் நிலையங்களில் பதற்றம்

கொழும்பு, ஒக். 05

மருதானை, கொழும்பு கோட்டை உள்ளிட்ட பல ரயில் நிலையங்களின் பாதுகாப்பிற்காக இராணுவம் மற்றும் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் ஆரம்பிக்கப்பட்ட திடீர் ரயில் மறியல் போராட்டத்தையடுத்து, பயணிகள் அமைதியற்ற நடத்தையில் ஈடுபட்டனர்.

கொழும்பு கோட்டை, மருதானை உள்ளிட்ட ரயில் நிலையங்களில் திரண்டிருந்த பயணிகள், நிலைய ஊழி யர்களுடன் மோதலில் ஈடுபட்டதால், பல நிலையங் களில் பதற்றமான சூழ்நிலை

11

## முல்லைத்தீவு நீதிமன்றத்தின் செயல்பாடுகள் முடங்கின!

முல்லைத்தீவு, ஒக். 05

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தினரால் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட காலவரையறையற்ற தொடர் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கைகள் நேற்று மூன்றாவது நாளாக தொடர்ந்தது.

சட்டத்தரணிகளின் பணிப்புறக்கணிப்பு காரணமாக முல்லைத்தீவு நீதிமன்ற நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

அதேநேரம் திங்கட்கிழமை மற்றும்

11

## உயர்தரப் பரீட்சை ஜனவரி 4 ஆரம்பம்

கொழும்பு, ஒக். 05

2023 ஆம் ஆண்டிற்கான கல்வி பொது தராதர உயர்தர பரீட்சையை ஜனவரி 04 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடத்த பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

திருத்தப்பட்ட பரீட்சை நேர அட்டவணை எதிர்வரும் நாட்களில் வெளியிடப்படுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

11



## நீதி தேவதைக்கு முன்பாக நேற்று மண்டியிட்ட போராட்டக்காரர்கள்

யாழ்ப்பாணம், ஒக். 05

யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணிகள் நீதி தேவதையிடம் மண்டியிட்டு, நீதிபதிக்கு நீதி கோரினர்.

முல்லைத்தீவு நீதிபதி விவகாரத்தில் கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தில் மனித சங்கிலி போராட்டம் நேற்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மருதனார் மடத்தில் ஆரம்பித்து யாழ்ப்பாண நகர் வரையில் நீளுகின்ற ஓர் மனித சங்கிலி போராட்டமாக முன்னெடுக்கப்பட்டது.

அதன்போது கொக்குவில் சந்தியில் போராட்டத்தில் ஈடுபட்ட சட்டத்தரணிகள்

11

## சீனாவின் தொடர் தாமதத்தினால் இலங்கைக்கு நாணய நிதிய உதவி கிடைக்காமல் போகலாம்!

கொழும்பு, ஒக் . 05

இலங்கையை சீனா தொடர்ந்து கடனில் வைத்திருப்பதால், சர்வதேச நாணய நிதியத்தின் சலுகைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளும் தெரிவித்த முக்கிய விடயங்களில் ஒன்று, கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மந்தகதியில் இடம்பெறுவதாகும்.

இருதரப்பு கடனாளர்களிடமிருந்து நிதி உத்தரவாதத்தைப் பெறுவது சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும், ஆனால் இலங்கை இன்னும் அதைச் செய்யவில்லை என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச நாணய நிதியம் முதல் மீளாய்வில் இலங்கை மீது குற்றம் சுமத்தவில்லை என்றாலும், இலங்கையின் கடன் தொடர்பில் சீனாவின் பின்னடைவு தற்போது பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளதாக

11

## நீதிபதியை மிரட்டியிருந்தால் என்னை அப்போதே கைது செய்திருக்கலாம்!

### சபையில் கூறினார் சரத் வீரசேகர எம்.பி.

கொழும்பு, ஒக். 05

முல்லைத்தீவு நீதிபதிக்கு நான் அச்சுறுத்தல் விடுத்திருந்தால், என்னை அந்த நேரத்திலேயே கைது செய்திருக்கலாம் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

11



# இப்படியும் நடக்கிறது

'நீதிவான் சரவணராஜா நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டமைக்கு எதிராகவும் நீதித்துறையின் சுயாதீனம் காக்கவும் தமிழ் தேசத்தின் இருப்பை காக்கவும் கோரி கிளிநொச்சியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.'

'முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் நேற்று முதல் காலவரையறையின்றி தொடர் நீதிமன்றப் புறக்கணிப்பைச் செய்வதற்குத் தீர்மானித்துள்ளது.'

'முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு, அவர் நாட்டை விட்டு வெளியேறிய விவகாரத்தில் உரிய நடவடிக்கையெடுக்க வலியுறுத்தி யாழ். மாவட்டத்தில் சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.'

மேலேயுள்ளவை ஒரு நாள் பத்திரிகையில் வெளிவந்த செய்திகளின் முதல் வாக்கியங்கள்.

ஒரு விடயத்துக்காக நடக்கும் போராட்டங்கள் வெவ்வேறு கோரிக்கைகளுடன் நடத்தப்படுகின்றன.

அதிலும் நாம் கவனிக்க வேண்டியது, நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு அவர் நாட்டைவிட்டு வெளியேறிய விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ்ப்பாண சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

நீதிபதி ஒருவர் தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்கிறார். பாராளுமன்றத்தில் சரத் வீரசேகர போன்றவர்கள் அவருக்கு எதிராக பேசிய பேச்சுகள் காரணமாக அவருக்கு அச்சுறுத்தல் என்கிறார்கள்.

கோரிக்கைகள் எல்லாம் சரியானதுதான். ஆனால், எம்மை உறுத்துகின்ற ஒரு கேள்வி, உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றால் நீதிபதி நாட்டுக்கு திரும்ப வேண்டும். தனக்கு எந்தவகையான அச்சுறுத்தல் இருந்தது, அதனை எவர் எந்த வகையில் வெளிப்படுத்தினார்கள் என்பதை விளக்கவேண்டும்.

தனது பாதுகாப்பு குறைக்கப்பட்டதாக அவர் சொல்வது, சட்டமா அதிபர் தீர்ப்பை மாற்றுமாறு கேட்டது பற்றிய விவரங்கள் விசாரணை செய்யப்படவேண்டும். அதற்கு அவர் பிரசன்னம் அவசியமானது. ஆகக்குறைந்தது அவர் எங்கிருக்கிறார் என்பதையாவது அவர் பகிரங்கமாக வெளிப்படுத்தி, விசாரணைகளுக்கு ஒத்துழைக்க வேண்டும். அப்போதுதான் உரிய நடவடிக்கையை எடுக்கமுடியும்.

அவர் அதனைச் செய்ய முன்வராத போது, அவரை நாட்டுக்கு அழைத்துவர இன்ரர்போலின் உதவியை நாடச் சொல்கிறார்களோ தெரியவில்லை.

எங்களுடைய கவலை எல்லாம் நீதிபதியின் முடிவுக்கு எதிராக போராட்டம் நடத்துகின்றவர்கள் எல்லாம் தமது கோரிக்கை என்ன என்பது தொடர்பாக தெளிவான கருத்தை கொண்டிருக்கிறார்களா என்பதுதான்.

ஒவ்வொருவரும் ஆளை ஆள் முந்திக்கொண்டு போராட்டங்களை அறிவிப்பதும், அவை பல்வேறு குழுக்களாக நடைபெறுவதும் ஒவ்வொருவரதும் 'பலத்தைக்' காட்ட உதவுமே தவிர தமிழ் மக்களுக்கு எந்தவகையிலும் உதவப்போவதில்லை.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த ஏனைய அனைத்து தமிழ் தேசிய கட்சிகளும் கூடி புதன்கிழமையன்று மனித சங்கிலிப்போராட்டம் நடத்துவது என்று முடிவெடுத்தனர். ஆனால், அன்றே தமிழரசு கட்சி திங்களன்றே தாங்கள் கிளிநொச்சியில் எதிர்ப்பு போராட்டம் நடத்துவது என்று முடிவெடுத்திருந்தது.

அதாவது தமிழரசுக் கட்சி புதனன்று மனிதசங்கிலி போராட்டத்தை நடத்துவதற்கு முடிவெடுக்கின்றது. ஆனால், தமிழரசின் கிளிநொச்சி கிளை தனியாக கிளிநொச்சியில் போராட்டம் நடத்துகின்றது.

போராட்டம் என்றால் ஒரு கோரிக்கையை முன்வைத்து நடத்தப்படவேண்டும். அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும்வரை அந்த போராட்டம் நடைபெறுகின்ற இடத்தை முடக்கிப்போடவேண்டும். அதைவிடுத்து ஒவ்வொருவரும் தத்தமது பலத்தை காட்டுவதற்காக வெவ்வேறு கோசங்களுடன் போராட்டம் நடத்துவது தமிழ் மக்களுக்கு எந்த வகையிலும் உதவப்போவதில்லை.

கிளிநொச்சியில் நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொள்வதற்கு முன்னர் இரண்டு இளைஞர்கள் தமக்குள் கதைத்துக்கொண்டு சென்றதை கேட்டுக்கொண்டிருந்த ஒரு நண்பர், அவர்கள் பேசிய விடயத்தை என்னுடன் பகிர்ந்துகொண்டார்.

'மச்சான், போராட்டத்திலை முன்னுக்கு நான் நிற்கிறதை வடிவா படம் எடுக்கிறதோட வீடியோவையும் எடு. நான் நிற்கிறதை நீ படம் எடுத்த பிறகு, நீ போய் முன்னுக்கு நில். நான் உன்னை எடுக்கிறன். இப்பிடி எடுக்கிற படத்தோட போனமெண்டால் லண்டனிலை நம்மட கேஸுக்கு அது போதுமாம்...'!

**-ஊர்க்குருவி.**

# யாழில் நேற்று மனித சங்கிலிப் போராட்டம்


























ஈழநாடு
Eelanadu
05.10.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 18

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணில் கூறுவதும் தமிழர் தரப்புகள் கூறுவதும்?

நீதிபதி சரவணராஜாவின் வெளியேற்றத்தை முன்வைத்து தமிழ் தரப்புகள் விவாதித்துவருகின்றன. நேற்றுவரை, சனல் 4 ஆவணப்படத்தை முன்வைத்து, விவாதித்தவர்கள் அனைவரது உதடுகளும் சரவண ராஜாவை உச்சரித்துக் கொண்டிருக்கின்றன. வடக்கு, கிழக்கை சேர்ந்த சட்டத்தரணிகள் தங்களின் எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றனர். தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் தங்களின் ஒரு நாள் எதிர்ப்பை வெளிப்படுத்தி யிருக்கின்றனர்.

தமிழர் தரப்புகளின் எதிர்ப்பு யாரை நோக்கியதாக இருக்கின்றது? சந்தேகமில்லை - சர்வதேசத்தை நோக்கியதாகத்தான் இருக்கின்றது. யுத்தத் திற்கு பின்னரான கடந்த 14 வருடகால கதைகள் இப்படியானதாகத்தான் இருந்திருக்கின்றது. நீதிபதி சரவணராஜாவின் வெளியேற்றத்தை முன் வைத்து தமிழ் கட்சிகள் சர்வதேசத்தின் தலையீட்டை கோரிக்கொண்டிருக் கும் சமவேளையில், நாட்டின் ஜனாதிபதியோ, ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை தவறானது - அதனை தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை யென்று, சர்வதேச ஊடகமொன்றிடம் கடும் தொனியில் கூறியிருக்கின்றார்.

ஐக்கிய நாடுகள் சபையையும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையையும் வேறாக்கி, பேரவையின் அணுகுமுறைகள் தவறானவை, அதனை இலங்கை நிராகரிப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார். ஐ.நா மனித உரிமைகள் பேரவையை விமர்சிப்பது, கடுமையாக எதிர்ப்பதில் முன் னோடியே அமெரிக்காதான் என்பது பலரும் அறியாத ஒன்று.

ஆனால் இதனை ரணில் நன்கறிவார். அமெரிக்காவில் குடியரசு கட்சி ஆட்சிக்கு வருகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை அமெரிக்கா கடுமையாக எதிர்ப்பதுண்டு - அதி லிருந்து வெளியேறுவதுண்டு. ஜோர்ஜ். டபிள்யு. புஷ், அமெரிக்க ஜனாதி பதியாக இருந்த போது, மனித உரிமைகளை பாதுகாப்பவர்களும் எதிர்ப்ப வர்களும் எவ்வாறு ஒரே இடத்தில் இருக்க முடியுமென்று, புஷ் கேள்வி யெழுப்பியிருந்தார் - பேரவையில் பங்குகொள்வதை புஷ் நிர்வாகம் நிரா கரித்தது.

டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவானதை தொடர்ந்து, அமெரிக்கா உனடியாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையிலிருந்து வெளியேறியது. அப்போது, ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்க தூதுவராக இருந்த நிக்கி ஹேலி (Nikki Haley) ஆகக் குறைந்தது மனித உரிமைகள் பேரவையென்னும் சொல்லுக்குக் கூட இந்த சபை தகுதியற்றது - பெயரில் உள்ளவற்றைக் கூட, இது முறையாக பிரதிபலிக்கவில்லையென்று கூறி பேரவையை கடுமையாக தாக்கிவிட்டு, அதிலிருந்து வெளியேறுவதாக ட்ரம்ப் நிர்வாகம் அறிவித்திருந்தது.

அமெரிக்க குடியரசு கட்சியின் அணுகுமுறையைத்தான் ரணில் இப்போது நினைவுபடுத்தியிருக்கின்றார். நம்மால், ரணிலின் கருத்துக்கள் மீது சீறிவிழ முடியுமென்றால், அமெரிக்க குடியரசு கட்சியின் அணுகுமுறை மீது எவர் கேள்வியெழுப்புவது? மனித உரிமைகள் பேரவையின் உள் பலவீனங்களை நாடுகள் நன்கறியும். பலம்பொருந்திய நாடுகளின் அதிகார மோதல்களுக்கு முன்னால் எதுவுமற்ற ஒரு சபைதான், ஐ.நா மனித உரிமை பேரவை. இதனை புரிந்து கொண்டிருப்பதால்தான், ரணிலால், இவ்வாறானதொரு நெருக்கடியான சூழலில் கூட, இந்தளவு திடகாத்திரமாக பேச முடிகின்றது.

ஆனால் மறுபுறமோ, நீதிபதி சரவணராஜாவின் விடயத்தில், ஐ.நா மனித உரிமைகள் பேரவை தலையீடு செய்ய வேண்டுமென்று கூறி, தமிழர் தரப்புகள் பேசிவருகின்றன. ஆனால், சம வேளையில், சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட உதவிக்காக காத்துக் கொண்டிருக்கும் ஒரு நாட்டின் அதிபர், உலகின் முதன்மையான சர்வதேச ஸ்தாபனமொன்றை, மேற்குலகின் எல்லைக்குள்ளேயே கடுமையாக எதிர்த்து பேசுகின்றார். இந்த ரணிலைத்தான், இந்தியாவும் அமெரிக்காவும் விரும்புவதாகவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள் கூறிவருகின்றனர். உண் மையில் விடயங்கள் யாருக்கு புரியவில்லை - ரணில் போன்றவர்களுக்கா - அல்லது, நமது தமிழ் தேசியர்கள் என்போருக்கா?

# அஜித் கப்ரால், லலித் வீரதுங்க வழக்கிலிருந்து விடுதலை!

கொழும்பு, ஒக். 05

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோருக்கு எதிரான வழக்கில் இருந்து இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2014ஆம் ஆண்டு அமெரிக்காவில் வசிக்கும் பாகிஸ்தான் பிரஜைக்கு 65 இலட்சம் அமெரிக்க டொலர்களை பொது நிதியாக வழங்கி, குற்றச் செயலில் ஈடுபட்டனர் என்று தினியாவல பாலித தேரர் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, ஜனாதிபதியின் செயலாளர் என்ற வகையில், எவ்வித அங்கீகாரமும் இன்றி, இலங்கை மத்திய வங்கிக்கு பாகிஸ்தான் பிரஜைக்கு குறித்த தொகையை வழங்குமாறு, உடன்படிக்கை செய்துகொண்டதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த முறைப்பாட்டில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக போதிய சாட்சியங்கள் தாக்கல் செய்யப்படவில்லை எனக் கூறி இந்த வழக்கை தள்ளுபடி செய்யுமாறு நீதிவான் திலின கமகே நேற்று புதன்கிழமை உத்தரவிட்டார். (ஐ)

# வாகனத்தை வாடகைக்கு பெற்று மாடுகளை திருடி கடத்தியோர் கைது!

கொழும்பு, ஒக். 05

கொழும்பிலிருந்து வாடகை அடிப்படையில் வாகனத்தை பெற்று அநுராதபுரத்துக்கு சென்று கால்நடைகளை திருடி இறைச்சிக்காக விற்பனை செய்த கும்பலைச் சேர்ந்த 6 பேர் வாகனத்துடன் கைது செய்யப்பட்டனர் என்று அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

ரம்பேவ, அநுராதபுரம் மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளில் வசிக்கும் 25 வயதுக்கும் 46 வயதுக்கும் இடைப்பட்ட 6 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சட்ட விரோத மாட்டு வியாபாரத்தின் மூளையாக செயல்பட்ட முன்னாள் விசேட அதிரடிப் படை சிப்பாய் ஒருவரை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு மாதத்துக்கு முன்னர், அநுராதபுரம், யாழ்ப்பாணம் சந்தி பகுதியில் இரண்டு மாடுகள் மற்றும் அநுராதபுரம் பகுதியில் மூன்று மாடுகள் திருடப்பட்ட சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளின் போது, இந்த திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் வெலிசறையைச் சேர்ந்த ஒருவருடையது என அடையாளம் காணப்பட்டது. (ஐ)

# ரயில் திணைக்கள ஒழுங்குபடுத்தல் அதிகாரிகள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஒக். 05

ரயில்வே திணைக்களத்தின் ஒழுங்குமுறைப் படுத்தல் அதிகாரிகள் சங்கம் நேற்று தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்று காலை மாளிகாவத்தை ரயில்வே வேலைத்தளத்தில் பிரதி கட்டுப்பாட்டாளர் ஒருவருக்கும் ரயில்வே பாதுகாப்பு சேவை அதிகாரி ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலே இந்தப் பணிப்பகிஷ்கரிப்புக்கு காரணம் என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

பிரதி கட்டுப்பாட்டாளரை தாக்கினார் என்று கூறப்படும் ரயில் பாதுகாப்பு சேவையின் நிரந்தர ஊழியரை பணி இடைநிறுத்துமாறு ஒழுங்குபடுத்தும் தொழிற்சங்கம் கோரி வருவதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# சிறையிலிருந்து விடுதலையானவர் தங்க நகைகளுடன் கைதானார்!

கொழும்பு, ஒக். 05

சிறையில் 8 வருடகாலம் தண்டனை அனுபவித்து விடுதலையான நபர் ஒருவர் 50 இலட்சத்துக்கும் அதிக பெறுமதியான தங்க ஆபரணங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தலங்கமை, தலாகெனை, முல்லேரியா மற்றும் பேதியாகொடை போன்ற பகுதிகளில் ஆபரணங்களை கொள்ளையிட்டுள்ளதாக தலங்கமை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, குறித்த சந்தேக நபரிடம் இருந்து 10.4 கிராம் ஐஸ் போதை பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு

ஒக்ரோபர் - 05 வியாழக்கிழமை
சோபகிருது வருடம் - புரட்டாதி 18
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : சப்தமி




**மேடம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளிவட்டாரத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். வியாபாரத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம். உரிமை எடுத்துக்கொள்ளாதீர்கள். விழிப்புடன் செயல்பட வேண்டும்

**மிதுனம்**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் பாக்கிகளை வசூலிக்க பாருங்கள். உத்தியோகத்தில் அலைக்கழிக்கப்படுவீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கடகம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். நீங்கள் பாராட்டப்படுவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**சிம்மம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். புகழ் கௌரவம் கூடும்.

**கன்னி**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். மரியாதை கூடும். நன்மை நடக்கும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரே நாளில் பல முக்கியமான வேலைகளை பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**விருச்சிகம்**
எதிலும் தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். புது சலுகைகள் கிடைக்கும். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மகரம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நட்பு வழியில் நல்லசெய்தி கேட்பீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். அமைதி நிலவும். கனவு நனவாகும்.

**கும்பம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். பொறுப்புகள் கூடும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்வீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

# கூட்டணி விலகல் முடிவில் ஒருபோதும் மாற்றமில்லை!

## அ. தி. மு. க. கட்சி திட்டவட்டம்

சேலம், ஒக். 05

**பாரதிய ஜனதா கட்சியுடனான கூட்டணியில் இருந்து விலகிய முடிவில் ஒருபோதும் மாற்றமில்லை. பாராளுமன்ற தேர்தலில் 40 தொகுதிகளிலும் அ. தி. மு. க. வெல்லும் என்று பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.**

**நேற்று சேலத்தில் செய்தியாளர்களை சந்தித்த அவர்,**

பாரதிய ஜனதா கட்சியுடன் இனி கூட்டணி இல்லை என்று தெளிவாக கூறிவிட்டேன். பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து விலகியது, 2 கோடி தொண்டர்களின் உணர்வின் முடிவாகும். பா. ஜ. கவின் தமிழ்நாடு மாநில துணை தலைவர் வி. பி. துரைசாமி தெரிவிப்பது அவரின் சொந்த கருத்தாகும். அ. தி. மு. க. கட்சியில் புதிய கூட்டணி கட்சிகள் இணைவதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

பா. ஜ. க. கூட்டணியிலிருந்து விலகல் முடிவில் மாற்றமில்லை. அ. தி. மு. கவின் வாக்கு வங்கி குறையவில்லை. பாராளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் அ. தி. மு. க. வெல்லும் தமிழகத்தில் மக்கள் விரோத ஆட்சி நடக்கிறது - என்றும் சொன்னார். (ஐ)

# சாதி வாரி கணக்கெடுப்பை தமிழகத்தில் நடத்த வேண்டும்!

## கட்சிகள் வலியுறுத்து

சென்னை, ஒக். 05

தமிழ்நாட்டில் சாதி வாரியான கணக்கெடுப்பு மீண்டும் நடத்தப்பட வேண்டும் என்று தமிழ்நாடு கட்சிகளின் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அ. ம. மு. கவின் பொதுச் செயலாளர் டி. வி. தினகரன் கூறுகையில்,

சாதி வாரி கணக்கெடுப்பு இல்லாமல், சமூக நீதி முழுமை அடையாது என்பதை உணர்ந்து, அதற்கான பணிகளை உடனடியாக தொடக்க வேண்டும்.

பா.ம.க., தலைவர் அன்புமணி கூறுகையில், தமிழகத்தில் சாதி வாரி கணக்கெடுப்பு நடத்த ஐ.ஏ.எஸ்., அதிகாரி வெங்கட கிருஷ்ணன் தலைமையிலான ஆணையத்தை, அன்றைய ஆளுநர் அலெக்சாண்டர் அமைத்தார். ஆனால், 1989இல் தி.மு.க., ஆட்சிக்கு வந்ததும், அது இரத்து செய்யப்பட்டது. இது, சமூக நீதிக்கு செய்யப்பட்ட பெரும் துரோகம்.

அதை இப்போதாவது, தி. மு. க. அரசு சரி செய்ய வேண்டும். 13 கோடி மக்கள் கொண்ட பீஹாரில் 45 நாட்களில் 500 கோடி ரூபாயில் சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது. எனவே, 7.64 கோடி மக்கள் தொகை கொண்ட தமிழகத்தில், குறைவான நாட்களில், குறைந்த செலவில் சாதி வாரி கணக்கெடுப்பை நடத்த முடியும் - என்றார். (ஐ)

# தமிழகத்துக்கு தண்ணீர் தராவிடின் கர்நாடகா அரசு பதவி நீக்கப்படும்!

## முன்னாள் முதல்வர் வீரப்ப மொய்லி



சிக்கபல்லாபூர், ஒக். 05

“தமிழகத்துக்கு காவிரி நீரை திறந்து விடாவிட்டால் மாநில அரசை பதவி நீக்கம் செய்து விடுவர். உச்ச நீதிமன்ற உத்தரவை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும்,” என காங்கிரஸ் கட்சியை சேர்ந்த முன்னாள் முதல்வர் வீரப்ப மொய்லி தெரிவித்தார்.

தமிழகத்துக்கு தினமும் விநாடிக்கு 3,000 கன அடி காவிரி நீர் திறந்து விடும்படி, காவிரி நீர் மேலாண்மை ஆணையம் சமீபத்தில் உத்தரவிட்டது. உச்ச நீதிமன்றத்தில் கர்நாடக அரசு தடை கோரியது. ஆனால், தடை விதிக்க நீதிமன்றம் மறுத்துவிட்டது.

இது தொடர்பாக என்ன செய்வது என்று சட்ட வல்லுநர்களுடன் முதல்வர் சித்தராமையா தலைமையில் கடந்த வாரம் உயர்மட்ட ஆலோசனை கூட்டம் நடந்தது.

அப்போது, தமிழகத்துக்கு கட்டாயமாக தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று சட்ட வல்லுநர்கள் அரசுக்கு அறிவுறுத்தினர். இதன்படி, தினமும் வினாடிக்கு 3,000 கன அடி நீர் தமிழகத்துக்கு திறந்து விடப்பட்டது.

இது குறித்து, காங்கிரஸை சேர்ந்த முன்னாள் முதல்வர் வீரப்ப மொய்லி கூறுகையில்,

தமிழகத்துக்கு காவிரி நீரை திறந்து விடாவிட்டால் மாநில அரசை பதவி நீக்கம் செய்து விடுவர். உச்ச நீதிமன்ற உத்தரவை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். எந்த கட்சி ஆட்சியில் இருந்தாலும் தண்ணீர் திறந்து விட்டனர்.

காவிரி விவகாரம் தொடர்பாக ஆலோசிக்க, பிரதமர் நரந்திர மோடியிடம் அனைத்து கட்சி குழுவை அழைத்து செல்ல நேரம் கேட்டு, பல நாட்கள் ஆகியும் இன்னும் பதில் வரவில்லை.

அவர் அலட்சியமாக செயல்படுகிறார். தமிழகத்துக்கு எதிராக பேசுவதால் எந்த பயனும் இல்லை. அவர்கள் உரிமையை அவர்கள் கேட்கின்றனர், நம் உரிமையை நாம் கேட்கிறோம். மத்திய அரசு உடனடியாக தலையிட்டு காவிரி பிரச்னையை தீர்க்க வேண்டும்.

ஆனால், அரசியல் ஆதாயத்துக்காக மத்திய அரசு தலையிடவில்லை. காவிரி பிரச்னையை தீர்ப்பது அவர்களுக்கு பிடிக்கவில்லை. இரண்டு மாநிலங்களுக்கும் சண்டை போட்டுக் கொள்வதையே மத்திய அரசு விரும்புகிறது - என்றார். (ஐ)

# முல்லைத்தீவு சட்டத்தரணிகளின் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது

முல்லைத்தீவு, ஒக். 05

**முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தின் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.**



நீதித்துறைக்கான சுதந்திரமும் சுயாதீன தன்மைகளும் உறுதி செய்யப்படும் வரை பணி புறக்கணிப்பில் ஈடுபடுவோம் என்று முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானம் மேற்கொண்டதாக முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் த. பரஞ்சோதி ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்

இதற்கமைய திங்கட்கிழமை ஆரம்பமான போராட்டம் மூன்றாவது நாளாகவும் நேற்று தொடர்ந்தது. நேற்றைய தினமும் முல்லைத்தீவு நீதிமன்ற நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

# மோசடியில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரி பணி இடைநீக்கம்!

கொழும்பு, ஒக். 05

நீர்கொழும்பு குடாப்பாடு பிரதேசத்தில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் பணத்துக்காக சூதாட்டத்தில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பில் கைதானோரிடம் கைப்பற்றப்பட்ட பணத்தை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்காமல் மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் இலஞ்ச ஒழிப்பு பிரிவின் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான பொலிஸ் பரிசோதகரால் கைப்பற்றப்பட்ட பெருந்தொகை பணத்தில் ஒரு பகுதியை இவர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்று உயர் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

பொலிஸ் பரிசோதகரால் கைது செய்யப்பட்ட ஆறு சந்தேக நபர்களில் ஒருவரிடம் இருந்து 4 இலட்சம் 20 ஆயிரம் ரூபாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்படாமல் மோசடி செய்தார் என்றும் கூறப்பட்டது.

இது தொடர்பாக நீர்கொழும்பு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விசாரணையை மேற்கொண்டு உதவி பொலிஸ் பரிசோதகர் பணியை இடைநீக்கம் செய்துள்ளார். (ஐ)

# செட்டிக்குளம் முத்துமாரி ஆலய சிலைகள் பெயர்க்கப்பட்டு சேதம்!




வவுனியா, ஒக். 05

வவுனியா - செட்டிக்குளம் - வீரபுரத்தில் அமைந்துள்ளமுத்துமாரி அம்மன் ஆலயத்தின் சிலைகளை இனந்தெரியாதோர் இருப்பிடங்களில் இருந்து பெயர்த்தெடுக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளன.

ஆலயத்தின் நவக்கிரக விக்கிரகங்கள் மற்றும் வைரவர், முருகன், அம்மன் விக்கிரகங்கள் இருப்பிடங்களில் இருந்து பெயர்க்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்று புதன்கிழமை பூசை செய்வதற்காக சென்ற ஆலயத்தின் குருக்கள் சிலைகள் சேதமாக்கப்பட்டமையை அவதானித்த உடன் ஆலய நிர்வாகத்தினருக்கு அறிவித்திருந்தார். பின் நிர்வாகத்தினர் செட்டிக்குளம் பொலிஸாருக்கு முறைப்பாடு அளித்தனர்.

சம்பவம் தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



# இந்தியத் தூதுவருடன் வடக்கு ஆளுநர் சந்திப்பு

கொழும்பு, ஒக். 05

வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவை கொழும்பில் அமைந்துள்ள இந்திய இல்லத்தில் நேற்று முன்தினம் சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது ஆளுநர் வடக்கின் எதிர்கால வளர்ச்சி குறித்து தாம் முன்னெடுக்கவுள்ள திட்டங்கள் பற்றி விளக்கி கூறினார். இதேவேளை, இந்திய அரசாங்கம் கடந்த காலங்களில் வழங்கிய ஆதரவுக்கு தமது நன்றிகளையும் தெரிவித்தார்.

உயர்ஸ்தானிகர் வடக்கு மாகாண மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கும் வடக்கின் அபிவிருத்திக்கும் தங்களது தொடர்ச்சியான ஆதரவு உறுதி என்று கூறினார்.

# கருத்தரங்குகளுக்கு 11ஆம் திகதி முதல் தடை!

கொழும்பு, ஒக். 05

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான கருத்தரங்குகள், மேலதிக வகுப்புகள் மற்றும் செயலமர்வுகள் எதிர்வரும் 11ஆம் திகதி நள்ளிரவு முதல் பரீட்சை நிறைவடையும் வரை தடை செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தத் தடையை மீறி செயற்படுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 2888 பரீட்சை மத்திய நிலையங்களில் நடைபெறவுள்ளது. (ஐ)

# சாரதி அனுமதி பத்திரத்துக்கு வாய்மொழி பரீட்சை நாளை!

கிளிநொச்சி, ஒக். 05

கிளிநொச்சி மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து பிரிவில் எழுதுதல், வாசித்தல் திறன் குறைந்தவர்களுக்கான வாய்மொழிப்பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதுவரை சாரதி அனுமதிப் பத்திரம் பெறத்தவறியவர்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாது பயன்படுத்திக் கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து பிரிவின் பிரதம மோட்டார் வாகன பரிசோதகர் ஜி. எச். டி. கே. விஜயசேகர அறிவித்துள்ளார்.

மேலும், பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன் ஏ-9 வீதி, கிளிநொச்சி பழைய கச்சேரி வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து பிரிவின் மாவட்ட காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்வதுடன், மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# முல்லைத்தீவில் 50 விவசாயிகளுக்கு விதை நிலக்கடலை வழங்கப்பட்டன

முல்லைத்தீவு, ஒக். 05

முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 50 பயனாளிகளுக்கு நேற்று கொக்கு -தொடுவாய் கமநல சேவைகள் நிலையத்தில் வைத்து நிலக்கடலை வழங்கி வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குதொடுவாய் கமநல சேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட கொக்குத்தொடுவாய், கருநாட்டுகேணி கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 50 பயனாளிகளுக்கு ஓர் ஏக்கர் பயிர்செய்கைக்கான தலா 50 கிலோ விதை நிலக்கடலை உள்ளீடுகளும் அத்துடன் ஆரம்ப கட்ட நிலம் பண்படுத்தலுக்காக சிறு தொகை கொடுப்பனவும் தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் நிதி பங்களிப்பில் கொக்குதொடுவாய் கமநல சேவை நிலையத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் தர்மலிங்கம் ஜீவரத்தினம் (ஜீவா) தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கொக்குத்தொடுவாய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்




அந்தோனிப்பிள்ளை ஜோன்ஸ் சிற்றா, விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி உத்தியோகத்தர் பத்திமனோகரன் விமல்ராஜ், அபிவிருத்தி உத்தியோகத்தர் பாஸ்கரன் தனுசன், கொக்குதொடுவாய் விவசாய போதனாசிரியர் இராசேந்திரன் நிதுஷன், கொக்குளாய் விவசாய போதனாசிரியர் தனபாலசிங்கம் துளசிராம் மற்றும் கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கி வைத்திருந்தனர். (ஐ)

# கட்சி அரசியலை புறந்தள்ளிவிட்டு தமிழின இருப்புக்காக சேருங்கள்!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 05

**கட்சி அரசியலைப் புறந்தள்ளி தமிழினத்தின் இருப்புக்காக அனைவரும் தொடர்ந்து இணைந்து செயல்பட முன்வரவேண்டுமென ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களை கண்டித்து யாழ்ப்பாணத்தில் நேற்று மனித சங்கிலி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில், பங்கேற்றவர்களுக்கு நன்றி தெரிவித்து அவர் விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தலைக் கண்டித்தும் இலங்கைத் தமிழர்களுக்கு உள்நாட்டு சட்டங்களுக்கமைய நீதி கிடைக்காது என்பதை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்காட்டுவதற்கும் இலங்கையில் மீண்டும் ஓர் இன அழிப்பு நடக்கக்கூடாது என்பதை வலியுறுத்தியும் இன்று (நேற்று) காலை 9.00 மணி தொடக்கம் 11.30 மணிவரை மருதனார்மடம் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் வரை நடைபெற்ற மனித சங்கிலி போராட்டத்தில் எமது குறுகிய கால அழைப்பை ஏற்றுக் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றிகள்.



இந்தப் போராட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்களும் பல்வேறுபட்ட தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் தொண்டர்களும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகளும் கலந்துகொண்டனர். அத்துடன் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் குருந்தூர்மலை சைவத் தமிழர்களுக்குச் சொந்தமானது என்று வழக்காடிய உறவுகளும் கலந்துகொண்டனர் என்பதுடன் அவர்கள் நீதிபதிக்கு எத்தகைய அழுத்தங்கள் இருந்தன என்பதையும் தெளிவாக ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்த கருத்துகள் சர்வதேச சமூகத்தின் செவிகளுக்குச் சென்றிருக்கும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம். இருக்கின்ற குறுகிய ஜனநாயக இடைவெளியைப் பயன்படுத்தி தமிழ்த் தேசிய இனத்திற்கு இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நீதி கிடைக்காது என்பதை நாம் தொடர்ந்தும் சர்வதேச சமூகத்திற்கு வலியுறுத்த வேண்டிய அவசியம் தமிழர் தரப்பிற்கு இருக்கின்றது. தமிழ் கட்சிகள் ஒன்றுகூடி அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய இருக்கின்றோம்.

எமது தொடர்ச்சியான போராட்டங்களே எமக்கான நீதியையும் நியாயத்தையும் எமது வாழ்வுரிமையையும் நிலைநாட்ட வழிவகுக்கும் என்பதை உணர்ந்து கட்சி அரசியலைப் புறந்தள்ளி எத்தகைய முரண்பாடுகளையும் ஒதுக்கி வைத்து, எமது இனத்தின் இருப்பிற்காக அனைவரும் தொடர்ந்து இணைந்து செயல்பட அறைகூவல் விடுக்கின்றோம் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உள்ளக பொறிமுறையில் இனப்பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு தவறு!

## சீ. வீ. கே. சிவஞானம் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 05

உள்ளக பொறிமுறையில் தமிழ் மக்களின் இனப்பிரச்னைக்கு நீதி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு தவறானது என்று வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மனித சங்கிலி போராட்டத்தில் பங்கேற்ற போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் பல நீதிபதிகளுக்கு உயிர் அச்சுறுத்தல்கள் காணப்பட்ட போதும் நீதிபதி ரி. சரவணராஜாவே அதை வெளிப்படுத்தியுள்ளார். அரசியல் தலையீடு மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களினுடைய நேரடி அச்சறுத்தல் காரணமாக நீதித்துறை அதிகாரி ஒருவர் தன்னுடைய கடமையை செய்வதை தடுத்து அவரை அச்சுறுத்தியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்த் தேசிய இனம் சார்ந்து ஒற்றுமையாக இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்படுகிறது. .

இந்த நாடும், அரசாங்கமும் எங்களுடைய உணர்வுகளை புரிந்து கொண்டு நீதி துறையை சுயமாக இயங்க அனுமதிக்க வேண்டும். அதை சர்வதேசம் உறுதிபடுத்த வேண்டும் என்ற மக்களின் உணர்வுகளை இந்த ஆர்ப்பாட்டம் வலியுறுத்துகிறது.

இதற்கு முன்னரும் பல நீதிபதிகளுக்கு அரசியல்வாதிகளிடமிருந்து அச்சுறுத்தல்கள் இருந்தாலுமே அவை வெளிப்படையாக இருந்ததில்லை. அச்சுறுத்தலுக்கு மேலாக மன அழுத்தம் உருவாகி ஒரு நீதிபதி நாட்டை விட்டு வெளியேறுகின்ற சூழ்நிலை இதற்கு முன்னர் காணப்பட்ட போதும் தற்போது ரி. சரவணராஜா அதை வெளிப்படையாக செய்துள்ளார்.

"ஏற்கனவே உள்ளக பொறிமுறையில் நம்பிக்கை இல்லை என்பதை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்ற நிலையில் இப்பொழுது அது நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் உள்ளக பொறிமுறையின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு தவறானதோடு அது சாத்தியமற்றது - என்றும் கூறினார். (ஐ)

# ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பு; மைத்திரிக்கு எதிராக விசாரணைக்கு

கொழும்பு, ஒக். 05

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு மன்னிப்பு வழங்கிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட இரண்டு அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்களை விசாரிப்பதற்கு உச்ச நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

அரசமைப்புச் சட்டத்தின் 12(1) பிரிவின்படி (சமத்துவ உரிமை) மனுக்களை தொடர உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

மாற்றுக் கொள்கைகளுக்கான மையம், காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட ஆகியோரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

நீதிபதிகள் எஸ். துரைராஜா, யசந்த கோதாகொட மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் இந்த மனுக்களை அடுத்த வருடம் மே 6ஆம் திகதி வாதத்துக்கு ஒத்திவைத்துள்ளது. (ஐ)

# இ. போ. ச. - சொகுசு பேருந்துகள் மோதிய விபத்தில் 6 பேர் காயம்!

கொழும்பு, ஒக். 05

இ. போ. ச. பேருந்தும் சொகுசு பேருந்தும் மோதிய விபத்தில் ஆறு பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கதிர்காமத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்றும் கொழும்பில் இருந்து காலி நோக்கி பயணித்த சொகுசு பேருந்து ஒன்றும் நேருக்கு நேர் மோதியே இந்த விபத்து இடம் பெற்றது.

களுத்துறை - பேருவளை - மாகல்கந்த பிரதேசத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றது. இதில், 6 பேர் காயமடைந்து மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சொகுசு பேருந்தில் பயணித்தவர்களே காயமடைந்தனர். இதில், அந்த பேருந்தின் சாரதியும் அடங்குவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றை முந்திச்செல்ல முற்பட்ட போதே எதிர்திசையில் வந்த சொகுசு பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# நாட்டின் அனைத்துத் துறைகளிலும் அரசியல் தலையீடு இனவெறி உண்டு

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 05

நீதித்துறை உட்பட இலங்கையின் சகல துறைகளும் ஊழல் நிறைந்ததாகவும், அரசியல் தலையீடு மிகுந்த இனவெறி கொண்டதாகவுமே இருக்கிறது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த மனித சங்கிலிப் போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி. சரவணராஜா மீது நடத்தப்பட்ட இனவெறித்தனமான மோசமான பயமுறுத்தலை தொடர்ந்து பதவி விலகல் கடிதத்தை வழங்கியதோடு அவர் நாட்டை விட்டு தப்பி சென்றுள்ளார்.

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் நீதிமன்ற உத்தரவை மீறியே பௌத்த விகாரை கட்டப்பட்டது என்ற தீர்ப்பை வழங்கியதோடு, தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்க மறுத்து தீர்ப்பு வழங்கியதை அடுத்தே அவருக்கு எதிரான இனவெறித்தமான கருத்துக்களை இனவெறியர்களான சரத் வீரசேகர, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்கள் பாராளுமன்றத்திலே வெளியிட்டதன் மூலமே நீதிபதி இன்று நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

இது இலங்கையின் நீதி துறையின் வெட்கக்கேடான நிலைமை. இலங்கையின் சகல துறைகளும் ஊழல் நிறைந்ததாகவும், அரசியல் தலையீடு மிகுந்த இனவெறி கொண்டதாகவுமே இருக்கிறது. இலங்கையின் நீதித்துறை வரலாற்றை எடுத்து கொண்டால் கறைபடிந்த அத்தியாயங்களை பெரும் தொடராக எழுதலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு ஏற்பட்ட இந்தநிலை சிறுபான்மை இனமான தமிழ், முஸ்லிம் என்பதை தாண்டி சிங்கள நீதிபதிகள்கூட அரசாங்கத்துக்கு எதிராக தீர்ப்பு வழங்கினால் அவர்களுக்கும் இதேநிலைதான் என்பதை தெளிவாக காட்டுகின்றது - என்றும் சொன்னார்.

# நீதிபதி சரவணராஜா விவகாரம் விசேட விசாரணைகள் ஆரம்பம்!

கொழும்பு, ஒக். 05

முல்லைத்தீவு நீதிவான் மற்றும் மாவட்ட நீதிபதி ரி. சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பில் நீதி சேவைகள் ஆணைக்குழுவால் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்காக விசாரணை குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். நீதிபதியின் பதவி விலகல் தொடர்பில் நீதிச் சேவைகள் சங்கம் நேற்று முன்தினம் பிரதம நீதியரசரை சந்தித்து கடிதமொன்றை கையளித்திருந்தது.

சம்பவத்துக்கான காரணத்தையும் பொறுப்புக்கூற வேண்டியவர்களையும் கண்டறிய நடவடிக்கை எடுக்குமாறும் நீதிபதிகள் மற்றும் நீதிமன்றத்தின் சுயாதீனத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் நீதிச் சேவைகள் சங்கம் குறித்த கடிதத்தினூடாக பிரதம நீதியரசரிடம் கோரிக்கை விடுத்திருந்தது. (ஐ)

# சமூகவலைத்தளங்களை சீனாவை போல முற்றாக தடைசெய்வது எமது இலக்கல்ல!

## அமைச்சரவை பேச்சாளர் பந்துல

கொழும்பு, ஒக். 05

**சீனாவை போன்று சமூக வலைத்தள பாவனையை முற்றாக தடை செய்ய வேண்டும் என்பது எமது இலக்கல்ல. போலி தகவல்கள் மற்றும் செய்திகளை பரப்புவதன் ஊடாக இன, மத மோதல்களையும் வன்முறைகளையும் தூண்டும் செயல்பாடுகளை கட்டுப்படுத்துவதே அரசாங்கத்தின் இலக்காகும் என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நிகழ்நிலை காப்பு சட்ட மூலத்தின் ஊடாக சமூக வலைத் தள ஊடகங்களை முடக்க எதிர்பார்க்கவில்லை. போலி தகவல்கள் அல்லது செய்திகள் பகிரப்படுதல், ஏனைய குற்றச்செயல்களை தடுப்பதற்காகவே இந்த சட்ட மூலம் அறிமுகப்படுத்தப்படுகிறது.



அபிவிருத்தியடைந்த சீனா போன்ற நாடுகளில் எவ்வித சமூக வலைத்தளங்களும் பாவிக்கப்படுவதில்லை. அவற்றுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறானதொரு தடையை விதிப்பதற்கு இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை.

இன, மத ரீதியான மோதல்களையும் வன்முறைகளையும் தூண்டக் கூடிய, தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் செயற்பாடுகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டும் என்பதற்காகவே இந்த சட்ட மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது -என்றார்.

(ஐ)

# வெளிநாடுகளில் இருந்து மருத்துவர்களை அழைத்து வர நடவடிக்கை எடுக்கவில்லை

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 05

இலங்கையில் உள்ள அரச மருத்துவமனைகளில் மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறைக்கு தீர்வாக வெளிநாட்டு மருத்துவர்களை கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படவில்லை என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து மருத்துவர்களை வரவழைக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை என்று அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.


வெளிநாட்டு மருத்துவர்களை கொண்டுவர அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் மருத்துவ பீடங்களை அதிகரிப்பது அல்லது தனியார் மருத்துவ பீடங்கள் இயங்க அனுமதிப்பது என இரண்டு தெரிவுகள் மட்டுமே மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உள்ளதாக அமைச்சர் கூறினார்.

(ஐ)

# கேள்விகள் கேட்டால் பதிலளிக்க தயார்!

## பிரதமர் தினேஷ் சொல்கிறார்



கொழும்பு, ஒக். 05

பாராளுமன்றத்தில் நாள் முழுவதும் கேள்விகள் கேட்டாலும் பதிலளிக்க தயாராக இருப்பதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நிலையியல் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதமரிடம் கேள்விகள் கேட்கும் சந்தர்ப்பம் நடைமுறைப்படுத்தப்படாமை தொடர்பில் மாத்தறை மாவட்ட சபை உறுப்பினர் புத்திக பத்திரண வினவிய போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சபாநாயகர் தலைமையில் நடைபெறும் கட்சித் தலைமைக் குழுக் கூட்டம் அந்த வாய்ப்பை வழங்க வேண்டும் என்று பிரதமர் கூறினார். நிலையியற் கட்டளையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கட்சித் தலைமைக் குழு தீர்மானிக்க வேண்டும் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

# 65 நகரங்களில் மட்டும் 4,000 பிச்சைக்காரர்கள்!

கொழும்பு, ஒக். 05

நாட்டின் 65 நகரங்களில் மட்டும் 3 ஆயிரம் முதல் 4 ஆயிரம் பிச்சைக்காரர்கள் இருக்கின்றனர் என்று தேசிய சமூக மேம்பாட்டு நிறுவனத்தின் சமீபத்திய கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

24 மாநகர சபை பிரிவுகள் மற்றும் 41 நகர சபை பிரிவுகளில் நான்கு நாட்களாக நடத்தப்பட்ட இந்த கணக்கெடுப்பு குறித்து, தேசிய சமூக மேம்பாட்டு நிறுவனம், பெண்கள், குழந்தைகள் விவகாரம் மற்றும் சமூக அதிகாரமளித்தல் தொடர்பான அமைச்சர்களின் ஆலோசனை குழுவிடம் தகவல்களை தெரிவித்துள்ளது.

பெண் குழந்தைகள் விவகாரங்கள் மற்றும் சமூக அதிகாரமளித்தல் தொடர்பான அமைச்சுகளின் ஆலோசனைக் குழு, குழந்தைகள், சிறுவர்கள் பிச்சை எடுப்பதைத் தடுக்கும் பொறிமுறையை தயாரிக்க சிறப்பு குழுவை அமைக்க முடிவு செய்துள்ளது.

சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமானால் சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவருவதற்கு தலையிடுவது குறித்தும் குழு கவனம் செலுத்தியது.

பாராளுமன்ற உறுப்பினர்கள், பெண்கள் மற்றும் சிறுவர் பொலிஸ் பிரிவு உட்பட பங்குதாரர்களைக் கொண்ட இந்த விசேட குழுவை ஒருங்கிணைக்கும் பணி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு வழங்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் தொடர்பான அமைச்சு ஆலோசனைக் குழுவில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களை பிச்சையெடுக்கும் தொழிலாக பயன்படுத்துவது தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், சிறுவர்களை பிச்சை எடுப்பது முற்றாக நிறுத்தப்பட வேண்டுமென இராஜாங்க அமைச்சர் அனுபா பாஸ்குவல் தெரிவித்துள்ளார்.

நகரில் பிச்சைக்காரர்கள் கணக்கெடுப்பு தரவுகள் பதிவு செய்யப்பட்டு வருகிறது, இது வரை தெரிவிக்கப்பட்ட தரவுகளின்படி, 3,000 முதல் 4,000 பிச்சைக்காரர்கள் உள்ளனர் மற்றும் தரவுகளை சேகரித்த பிறகு, பதினெட்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் பற்றிய தகவல்கள் திரட்டப்படும் என தேசிய சமூக மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், நாடு முழுவதும் உள்ளடங்கும் வகையில் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

(ஐ)

# மஸ்கெலியா விபத்தில் 22 பேருக்கு காயங்கள்!

நுவரெலியா, ஒக். 05

லொறி பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி உட்பட 22 பேர் காயங்களுக்கு உள்ளாகினர். இதில் மூவர் படுகாயங்களுக்கு உள்ளாகினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 9.50 மணியளவில் நுவரெலியா - மஸ்கெலியா - பிரவுன்ஸ்விக் பகுதியில் இடம்பெற்றதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள பிரவுன்ஸ்விக் தோட்ட புளும்பீல்ட் பகுதியில் இருந்து காசல்றி பகுதிக்கு மரண வீடொன்றுக்கு சென்று திரும்பும் வழியிலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

22 பேர் காயமடைந்த இந்த விபத்தில், மூவர் படுகாயங்களுக்கு உள்ளாகினர். இவர்கள் கண்டி போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை. மஸ்கெலிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

# சட்டப்படி செயல்படுவது தொடர்பில் ஊடகங்கள் கலந்துரையாட வேண்டும்

கொழும்பு, ஒக். 05

சர்வதேச உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதா அல்லது நாட்டின் சட்டத்துக்கு அமைவாக செயல்படுவதா என்பது தொடர்பில் சமூக ஊடகங்கள் உட்பட இந்நாட்டின் அனைத்து ஊடகங்களும் கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையின் மூத்த ஊடகவியலாளர்களில் ஒருவரான ‘திவயின’ பத்திரிகையின் ஆரம்ப ஆசிரியரும் ஆசிரியர் பீட பணிப்பாளருமான எட்மண்ட் ரணசிங்கவை கௌரவிக்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆரம்ப காலங்களில் எழுத்துகள் கோர்க்கப்பட்டு உருவாக்கப்பட்ட பத்திரிகை கலை இன்று நவீனமயமாக்கப்பட்டுள்ளது. அதனால் பத்திரிகை துறையை சமூகமயப்படுத்துவதற்கு தொழில்நுட்பம் சிறந்த களமாகவும் அமைந்துள்ளது.

இருப்பினும் எந்தவொரு நாட்டிலும் உள்ள ஊடகங்கள் அந்நாடுகளின் சட்டங்களுக்கு இணங்கிச் செயற்படுகின்றன. ஆனால், சமூக ஊடகங்களின் வரவை தொடர்ந்து அவரவரின் தேவைக்கேற்ற பதிவுகள் இடப்படுகின்றன.

அதனால் அனைத்து சமூக ஊடகங்களும் சர்வதேச சட்டத்துக்கு இணங்க வேண்டுமா அல்லது நாட்டின் உள்ளக சட்டதிட்டங்களுக்கு இணங்க வேண்டுமா என்ற கலந்துரையாடலை ஏற்படுத்த வேண்டும். ஐரோப்பாவில் உள்ள சட்டத்துக்கு அனைவரும் உடன்படுவதற்கான சாத்தியம் உள்ளது.

தற்போது உலகிலுள்ள பத்திரிகை மற்றும் சஞ்சிகை உரிமையாளர்கள் விற்பனை அல்லது முதலீட்டாளர்களிடத்தில் மீளக் கையளிக்கும் செயல்பாடுகளுக்கு தயாராக உள்ளனர். அதனால் ஊடகத்துறையின் எதிர்கால நடைமுறையை அடுத்த இரண்டு, மூன்று வருடங்களுக்குள் அவதானிக்க முடியும். அந்த துறைசார் நிபுணர்கள் நியூயோர்க்கில் மாத்திரமின்றி இலங்கையிலும் உருவாகலாம் - என்றார்.

(ஐ)

# திருமலையில் காணி அபகரிப்பு; அரசாங்கம் நிறுத்தி தரவேண்டும்!

## பாராளுமன்ற உறுப்பினர் தௌபீக்

**கொழும்பு, ஒக். 05**

**சட்டவிரோத காணி அபகரிப்பு செயல்பாடுகளை உடன் நிறுத்தவேண்டும் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தௌபீக் தெரிவித்துள்ளார்.**

**நேற்றுமுன்தினம் பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.**

மேலும், திருகோணமலை மாவட்டத்தை பொறுத்தவரையில் காணி பிரச்னையானது எல்லா பிரதேசத்திலும் காணப்படுகிறது. சென்ற வாரம் புல்மோட்டை பிரதேசத்தில் அந்த மக்களுக்கு சொந்தமான காணிகள் தொல்பொருள் திணைக்களத்துக்கு சொந்தமானது என வர்த்தமானி வெளியிட்டு அந்தக் காணிகளை அபகரிப்பதற்கு முயற்சிப்பதாகவும் சட்டவிரோத காணி அபகரிப்பு செயல்பாடுகளை உடன் நிறுத்தவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறான சட்டவிரோத காணி அபகரிப்புக்கள் தொடர்பில் நாங்கள் காணி அமைச்சர், பிரதமர் மற்றும் ஜனாதிபதி என எல்லா உயர்மட்டங்களுக்கும் இப்பிரச்னையை கொண்டு சென்றும் இதனை நிறுத்துமாறு கோரியும் இதுவரையில் எந்த பிரச்னைகளும் தீர்க்கப்படவில்லை. இந்த நாட்டின் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுசென்றும் இப்பிரச்னையை தீர்க்க முடியவில்லையாயின் இதை நாங்கள் யாரிடம் சென்று தீர்ப்பது எனவும் கேள்வி எழுப்பினார்.

இந்த மக்கள் யுத்தம், சுனாமியினால் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்கின்ற அப்பாவி மக்களுடைய காணிகளே அபகரிக்கப்பட்டுள்ளது. இப்படியான அநியாயங்கள் நடக்கின்ற போதும் சட்டம் சரியாக அமுல்படுத்தப்படவில்லை எனவும் குற்றம்சாட்டினார்.

அதேபோல், கிண்ணியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சில காணிகள், முத்துநகர், கப்பல்துறை போன்ற காணிகளில் ஆரம்பத்தில் மக்கள் விவசாயம் செய்த போதிலும் பிறகு அது துறைமுக அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இது பல பிரச்சினைகள் காணப்படுகின்றது எனவும் இந்தப் பிரச்னைகளை அரசாங்கம் தீர்த்துத்தர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். (ஐ)



முல்லைத்தீவு நீதிபதி விவகாரம்:

# நீதி கோரி கல்முனையில் சட்டத்தரணிகள் போராட்டம்!

கல்முனை, ஒக். 05

கல்முனை சட்டத்தரணிகள் சங்கம் முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக நீதி கோரி நீதிமன்ற பணிபுறக்கணிப்புடன் நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு முன்பாக கண்டன ஆர்பாட்டத்தில் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜாக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக நீதிகோரி கல்முனை சட்டத்தரணிகள் சங்க தலைவர் எம். ஐ. றைசூல் ஹாதி பணிப்புறக்கணிப்பும் கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்ததையடுத்து நீதிமன்ற கட்டடத்தொகுதிக்கு முன்னால் சட்டத்தரணிகள் ஒன்றிணைந்தனர்.

இதில் நீதிதுறையின் சுதந்திரத்துக்காகக் குரல் கொடுப்போம், சட்டத்தின் முன் யாவரும் சமம், நீதிதுறையை அச்சுறுத்தாதே, பாரபட்சமற்ற விசாரணை வேண்டும், சுதந்திரத்தில் தலையிடாதே போன்ற கோஷங்களை ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோர் எழுப்பியிருந்தனர்.



# கழிவு நீரால் சுகாதார சீர்கேடு; அகற்றுவதற்கு நடவடிக்கை!

கல்முனை, ஒக். 05

கல்முனையில் வீட்டுத் திட்டத்தில் தேங்கி நிற்கும் கழிவு நீரால் ஏற்படுகின்ற பெரும் சுகாதார சீர்கேடு தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அம்பாறை - கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பெரிய நீலாவணை இஸ்லாமிக் ரிலீப் வீட்டுத் திட்டத்தில் தேங்கி நிற்கும் கழிவு நீரால் பெரும் சுகாதார சீர்கேட்டை மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பில் ஆராயும் முகமாக பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ். எம். எம். முஷாரப் சென்றார்.

இதன்போது கடந்த சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட 96 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இஸ்லாமிக் ரிலீப் வீட்டுத் திட்டத்தில் 18 வருங்களாக முறையான வடிகான் இன்மையால் சமையலறை, குளியலறை, மலசலகூட கழிவு நீர் வீட்டுத்திட்டத்தின் பின்புறங்களில் தேங்கி நின்று பெரும் சுகாதார சீர்கேடுகளை உருவாக்கியுள்ளது.

குறித்த களவிஜயத்தின் போது அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜயபத்ம கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாகத் அலி மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் எச். பி. அனிஸ் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பிரசன்னமாக இருந்தனர். (ஐ)

# யானை தாக்கி பெண் மரணம்

கல்முனை, ஒக். 05

காட்டு யானையின் தாக்கியதில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

அம்பாறை - சம்மாந்துறை -நயினாகாடு - வம்பியடி நேற்று முன்தினம் இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் இரவுநேரம் பயணித்த பெண்ணே யானையின் தாக்குதலில் இவ்வாறு உயிரிழந்தார். இதில், இறக்காமம் பகுதியை சேர்ந்த புஹாரி சரீப் சிபானி (வயது 43) என்ற மூன்று பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் சம்மாந்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-01)

# முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் களுதாவளையில் ஆர்ப்பாட்டம்!

மட்டக்களப்பு, ஒக். 05

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று புதன் கிழமை களுதாவளையில் அமைந்துள்ள மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபையின் முன்பாக பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



இந்தப் பிரதேசத்திலேயே இருந்து கொண்டு பிரதேச சபைக்கு வரியை செலுத்திக் கொண்டு தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வரும் தமக்கு வெளி பிரதேசங்களிலிருந்து வரும் முச்சக்கர வண்டிகளால் பெரும் நட்டத்தை எதிர்கொள்வதாகவும், இதனால் தமது வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்படுவதாகவும், ஆர்ப்பாட்டக்களார்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களின் பிரதிநிதிகளை பிரதேச சபையின் செயலாளர் சா. அறிவழகன் அவரது காரியாலயத்தினுள் அழைத்ததோடு, கடமையிலிருந்த களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரி. அபயவிக்கிரம செயலாளர் அழைத்து பேச்சில் ஈடுபட்டார்.

இதன்போது பல தீர்மானங்கள் எடுப்பட்ட பின்ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

(ஐ)

# எமது பிரச்னைக்கு தீர்வின்றேல் சாகும்வரை உண்ணாவிரதம்!

## கால்நடை பண்ணையாளர்கள் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக். 05

எமது பிரச்னைக்கு சில தினங்களுக்குள் தீர்வு வழங்காவிட்டால் வீதி மறிப்பு போராட்டத்தில் ஈடுபடுவோம். அத்துடன் சாகும் வரை உண்ணாவிரத போராட்டம் நடத்துவோம் என மட்டக்களப்பு கால்நடை பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட கால்நடை பண்ணையாளர்கள் சித்தாண்டியில் நடத்தும் நடத்தும் 19ஆவது நாள் போராட்டத்தின்போதே இதனைத் தெரிவித்தனர்.

சில அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் போராடிவரும் எம்மை கேலியாக எண்ணுகின்றனர். தீர்வை வழங்கவேண்டியவர்கள் இவ்வாறு எம்மை கருதுவது கவலைக்குரியது. எமக்கான தீர்வை சில தினங்களுக்குள் வழங்காவிட்டால் மாவட்டத்தில் பெருமளவிலான வீதி மறிப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ள நிலையில் சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

எமது நிலைமையறிந்து போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியவர்கள் இன்று பின்னடிக்கும் நிலைமை காணப்படுகிறது. சிலர் அதிகாரிகளின் செயல்பாடுகளுக்கு ஒத்துழைக்கின்றனர் என்றும் போராட்டக்காரர்கள் இதன்போது கூறினர். (ஐ)

# சூடான் உள்நாட்டு மோதல் 54 இலட்சம் பேர் இடப்பெயர்வு

## ஐ. நா. அகதிகள் நல பிரிவு

**கார்ட்டூம், ஒக். 05**

**சூடானில் இராணுவத்துக்கும், துணை இராணுவப் படைக்கும் இடையே அண்மைக்காலமாக நடந்து வரும் மோதல் காரணமாக 54 இலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.**

**இது குறித்து ஐ. நாவின் சர்வதேச அகதிகள் நலன் பிரிவு தெரிவித்துள்ளதாவது:**

சூடானில் இராணுவத்துக்கும் துணை இராணுவப் படைக்கும் இடையே கடந்த மூன்றரை மாதங்களுக்கு மேல் நடைபெற்று மோதல் காரணமாக, 54 இலட்சம் பேர் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி தவித்து வருகின்றனர்.

இவர்களில் 43 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் உள்நாட்டிலேயே அகதிகளாக உள்ளனர். 11 இலட்சம் பேர் சர்வதேச அகதிகளாகியுள்ளனர். இவர்கள், அயல் நாடுகளான எகிப்து, சாட் போன்ற நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

வடக்கு ஆப்பிரிக்க நாடான சூடானில் அப்தெல் பட்டா அல்-புர்ஹான் தலைமையிலான இராணுவத்துக்கும், முகமது ஹம்தான் டகாலோ தலைமையிலான ஆர். எஸ். எவ். துணை



இராணுவப் படைக்கும் இடையே அதிகாரப் போட்டி காரணமாக கடந்த ஏப்ரல் 15ஆம் திகதி முதல் சண்டை நடந்து வருகிறது. இதில், இது வரை 4 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் பேர் வரை உயிரிழந்தனர் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# 125 ஆண்டுகளில் இல்லாதளவு ஜப்பானில் வெப்பநிலை உயர்வு

*ரோக்கியோ, ஒக். 05*

ஜப்பானில் கடந்த 125 ஆண்டுகளில் இல்லாதளவு இந்த கடந்த செப்ரெம்பர் மாதத்தில் அதிகூடிய வெப்பம் பதிவாகியிருப்பதாக அந்நாட்டு வானிலை ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

வழமைக்கு மாறாக ஜப்பானில் கடந்த செப்ரெம்பரில் பதிவான வெப்பநிலை, சராசரி வெப்பநிலையை விட 2.66 பாகை செல்சியஸ் அதிகமாகப் பதிவாகியுள்ளது.

இது தொடர்பில் அந்நாட்டு வானிலை ஆய்வு நிலையம் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், 1898ஆம் ஆண்டு முதல் வானிலை குறித்த தரவுகளைப் பதிவுசெய்து வருகிறோம். இதன்படி, 2023 செப்ரெம்பர் மாதத்தில்தான் அதிகூடிய வெப்பநிலை பதிவாகியுள்ளதாக புளள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

“இந்த வெப்பநிலை இயல்புக்கு மாறானது. இந்த வெப்பநிலை பதிவு முந்தைய அதிகபட்ச வெப்பநிலையையே விஞ்சிவிட்டது. இந்த வெப்பநிலை அதிகரிப்பு அசாதாரணமானது இல்லை” என்று ஜப்பானிய வானிலை நிலைய அதிகாரி மசயுகி ஹிராய் தெரிவித்தார்.

# இத்தாலியில் பேருந்து விபத்து; 21 பேர் பலி; 18 பேர் படுகாயம்!

*வெனிஸ், ஒக். 05*

வடக்கு இத்தாலியின் வெனிஸ் அருகே உள்ள மேம்பாலத்தில் இருந்து கேம்ப்கிரவுண்டிற்கு சுற்றுலா பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து விபத்துக்குள்ளானது. இதில், 21 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 18 பேர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெனிஸ் நகரத்துடன் பாலம் மூலம் இணைக்கப்பட்டுள்ள மெஸ்ட்ரே மாவட்டத்தில் உள்ள ரயில் பாதைகளுக்கு அருகில் பேருந்து வீதியை விட்டு விலகியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இயற்பியலுக்கான நோபல் 3 விஞ்ஞானிகளுக்கு பகிர்வு



*ஸ்டாக்ஹோம், ஒக். 05*

அணுவுக்குள் என்ன நடக்கிறது என்பது தொடர்பான ஆய்வில் எலக்ரோன்களில் ஏற்படும் மாற்றங்களை கண்டறிந்த மூன்று விஞ்ஞானிகளுக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், அமைதி, பொருளாதாரம் ஆகிய 6 துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது. அந்த வகையில் 2023ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசுகள் கடந்த 2ஆம் திகதி முதல் அறிவிக்கப்படுகிறது. முதல் நாளில் மருத்துவத்துக்கான நோபல் பரிசு ட்ரூ வெய்ஸ்மேன், கட்டாலின் கரிக்கோவுக்கு அறிவிக்கப்பட்டது.

2ஆம் நாளான நேற்று முன்தினம் இயற்பியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. இதன்படி அமெரிக்காவின் ஒகையோ மாகாண பல்கலைக்கழக பேராசிரியர் பியர்லி அகோஸ்டினி, ஜேர்மனியின் மேக்ஸ் பிளான்க் இன்ஸ்ரிரியூட் பேராசிரியர் பெரன்க் க்ரவுஸ், சுவீடனின் லூண்ட் பல்கலைக்கழக பேராசிரியர் ஆனி ஹூலியர் ஆகிய 3 விஞ்ஞானிகளுக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இதுகுறித்து றோயல் சுவிட்டிஷ் அக்கடமி ஒவ் சயன்ஸ் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

அணுவுக்கு உள்ளே என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ள உதவும் மிகக் குறுகிய அதிர்வுகொண்ட ஒளியை உருவாக்குவது தொடர்பான ஆய்வில் பியர்லி அகோஸ்டினி, பெரன்க் க்ரவுஸ், ஆனி ஹூலியர் ஆகிய 3 விஞ்ஞானிகளும் வெற்றி பெற்றுள்ளனர். இதன் மூலம் எலக்ட்ரோன்களின் நகர்வை மிகத் துல்லியமாக கணக்கிட முடியும்.

எலக்ட்ரோன்களை பொறுத்தவரை ஒட்டோசெக்கனில் மாற்றங்கள் நிகழ்கின்றன. ஒட்டோசெகன்ட் என்பது ஒரு விநாடியில் மிகமிகச் சிறிய பகுதியாகும். மூன்று விஞ்ஞானிகளின் ஆய்வால் ஒட்டோசெக்கன் பொழுதில் எலக்ட்ரோன்களில் ஏற்படும் மாற்றத்தை மிகத் துல்லியமாக கணக்கிட முடியும். இதன்மூலம் எலக்ட்ரோன்களின் உலகத்தில் நுழைவதற்கான கதவு திறந்திருக்கிறது. இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சிக்கிம்மில் ஆற்றில் திடீர்வெள்ளம் 23 இந்திய இராணுவத்தினர் மாயம்!

*புதுடில்லி, ஒக். 05*

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான சிக்கிம்மில் மேகவெடிப்பு காரணமாக லொச்சென் பள்ளத்தாக்கில் நேற்று புதன்கிழமை டீஸ்டா ஆற்றில் திடீர் வெள்ளம் ஏற்பட்டது. இதில் இராணுவ வாகனங்கள் சில நீரில் மூழ்கின. அதிலிருந்த 23 இராணுவ வீரர்களை காணவில்லை என்று இந்திய இராணுவம் அறிவித்துள்ளது.

இது குறித்து குவாஹாட்டி இராணுவ மையத்தின் செய்தித் தொடர்பாளர் வெளியிட்ட அறிக்கையில்,

“புதன்கிழமை காலை சிக்கிம் மாநிலத்தின் லொச்சென் பள்ளத்தாக்கில் டீஸ்டா ஆற்றில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதில் இராணுவ வாகனங்கள் மூழ்கின. 23 இராணுவ வீரர்கள் மாயமான நிலையில். அவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்டம் அருகே பர்டாங் எனும் பகுதியில் இராணுவ வாகனங்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் திடீரென சுங்தங் அணையில் இருந்து நீர் வெளியேற்றப்பட்டது. இதனால் அப்பகுதியில் நீர்மட்டம் 15 முதல் 20 அடிக்கு உயர்ந்தது. இதில்தான் இராணுவ வாகனங்கள் மூழ்கியுள்ளன. சில வாகனங்கள் சேற்றில் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இந்தத் திடீர் வெள்ளப்பெருக்கால் சிக்கிம் முழுவதும் திடீர் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது. திடீர் வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளில் முதல்வர் பிரேம் சிங் தமங் பாதிப்புகளை ஆய்வு செய்தார்.



இவை ஒருபுறம் இருக்க இராணுவ வீரர்களைத் தேடும் பணியும் நடந்து வருகிறது.

## மேகவெடிப்பு என்றால் என்ன?

சாதாரணமாக மேகம் உருவாகும் நேரத்தை விட குறைந்த நேரத்தில் மழைமேகம் உருவாகி மெதுவாக மழை பொழியாமல் மணிக்கு 100 மில்லி மீற்றருக்கும் அதிகமானளவு மழையை ஒரே இடத்தில் கொட்டித் தீர்த்தால் அது மேகவெடிப்பு எனப்படும். இந்த அதீத மழையால் வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு முதலியன நிகழ்கிறது. கடந்த மாதம் இமாச்சல பிரதேசத்தில் மேகவெடிப்பு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து நடந்த நிலச்சரிவில் 20இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐ. எம். எவ். 2ஆம் கட்ட கடன்தொகை விரைவில் அறிவிப்பு வெளியாகும்!

## அமைச்சர் பந்துல குணவர்த்தன

கொழும்பு, ஒக். 05

**சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை முன்வைத்துள்ள மாற்று முன்மொழிவுகள் தொடர்பில் வாஷிங்டனிலுள்ள தலைமை அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. அவர்களின் மதிப்பீடுகளை தொடர்ந்து இரண்டாம் கட்ட கடன் தொகை தொடர்பில் அறிவிக்கப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

மரணத்தின் விளிம்பில் இருந்த பொருளாதாரத்தை சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் ஊடாகவே சுவாசிக்கும் மட்டத்துக்கு கொண்டு வர முடிந்துள்ளது. இதன் போது எட்டப்பட்ட இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் தாம் திருப்தியடைய முடியவில்லை.

அதில், அவர்கள் பிரதானமாகக் குறிப்பிட்டுள்ள விடயம் அரச வருமானம் அதிகரிக்கப்படாமையாகும். இரண்டாவது அந்நிய செலாவணி கையிருப்பு அதிகரிக்கப்பட்டுள்ளமை போதுமானதல்ல. மூன்றாவதாக ஊழல், மோசடிகளை தவிர்ப்பதற்காக



சட்ட மூலம் முன்வைக்கப்பட்ட போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படாமை என்பவற்றைக் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையில் முன்னெடுத்த மீளாய்வு தொடர்பில் வாஷிங்டனிலுள்ள தலைமை அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தியதன் பின்னரே இறுதி தீர்மானம் அறிவிக்கப்படும். பலரும் எண்ணுவதைப் போன்று இது சாதாரண விடயமல்ல. 2022இல் வரிகளை அதிகரித்ததன் பின்னர் ஒரு இலட்சத்து 75 ஆயிரத்து 100 கோடி ரூபாய் வருமானத்தை மாத்திரமே ஈட்ட முடிந்தது. அதில் ஒரு இலட்சத்து 26 ஆயிரத்து 500 கோடி ரூபாய் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கும், ஓய்வூதியத்துக்கும் செலவிடப்பட்டது.

உலகில் எந்தவொரு நாடும் வரி வருமானத்தில் நான்கில் மூன்று பங்கை அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பளத்துக்காக செலவிடுவதில்லை. சமுர்த்தி உள்ளிட்ட கொடுப்பனவுகளுக்காக 25 சதவீதம் அரச வரி வருமானத்தில் செலவிடப்படுகிறது. இந்த செலவுகளை எவ்வாறு முகாமைத்துவம் செய்வது என்பது தொடர்பில் மாற்று முன்மொழிவுகளை முன்வைத்திருக்கின்றோம்.

அத்தோடு, அந்நிய செலாவணி இருப்பை அதிகரிப்பதற்கும், ஊழல் ஒழிப்பு சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் துரித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார்.

(ஐ)

# பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவர் பதவி விலகினார்!

கொழும்பு, ஒக். 05

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், பெற்றோலியக் களஞ்சிய முனையத்தின் தலைவர் மொஹமட் உவைஸ் தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

இது தொடர்பான கடிதம் நேற்று புதன்கிழமை மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகரவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

14 மாதங்களுக்கு முன்னர் மிகவும் சவாலான காலகட்டத்தில் பதவியை ஏற்று அர்ப்பணிப்பு மற்றும் சேவை உணர்வுடன் பணியாற்றியமைக்காக மொஹமட் உவைஸுக்கு நன்றி தெரிவிப்பதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக அவர் பதவியை இராஜிநாமா செய்துள்ளார் என்று அமைச்சர் தனது எக்ஸ் தளப் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)

# முல்லைத்தீவு நீதிபதி விலகல் சுயாதீன விசாரணை அவசியம்!

கொழும்பு, ஒக். 05

முல்லைத்தீவு நீதிபதியின் பதவி விலகல் மிகவும் பாரதூரமான விடயமாகும். எனவே, இவ்விடயம் தொடர்பில் சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்படுவது அவசியம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பாராளுமன்றில் முல்லைத்தீவு நீதிபதி பதவி விலகல் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவ்வாறு கூறினார்.

“முல்லைத்தீவு நீதிபதியின் பதவி விலகல் மிகவும் பாரதூரமான விடயமாகும். இது நீதித்துறை சுதந்திரம்சார் பிரச்னையாகும். முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு கொலை மிரட்டல்களும், அழுத்தங்களும் வந்தன என்று கூறப்படுகின்றது.

இது ஒரு பாரதூரமான அறிவிப்பு என்பதால், சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும். இதன் பின்னனியில் உள்ள உண்மை குறித்து இந்த சபைக்கு அறிவிக்கவேண்டும்” - என்றும் எதிர்க்கட்சி தலைவர் கூறினார்.

# விமான ஊழியர்களுக்கு சம்பள உயர்வு கிடையாது

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா

கொழும்பு, ஒக். 05

கடந்த சில நாள்களில் சிறீலங்கன் எயார் லைன்ஸ் விமானப் பயணங்கள் தாமதமானதால் சுமார் 60 இலட்சம் அமெரிக்க டொலர் நாட்டம் ஏற்பட்டுள்ளது. இதனால் விமான ஊழியர்களுக்கு தற்சமயம் கொடுப்பனவு அல்லது சம்பள அதிகரிப்பை வழங்கமுடியாது என துறைமுகங்கள். கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறீ லங்கன் எயார்லைன்ஸ் விமானங்கள் கடந்த சில நாள்களில் சரியான நேரத்தில் பயணிக்கத் தவறியமை தொடர்பாகவும், அதனால் மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் தொடர்பாகவும் விமானத்துறை அமைச்சர், சிறீ லங்கன் எயார் லைன்ஸ் நிர்வாகத்தினர் மற்றும் அனைத்துத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச சட்டங்களுக்கமைய, ஒரு விமானி மாதத்திற்கு 100 மணிநேரம் விமானத்தை செலுத்த வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. எமக்குக் கிடைத்த அறிக்கைகளின்படி, கடந்த காலங்களில் நாட்டின் விமானி ஒருவர் மாதத்திற்கு சுமார் 60 மணிநேரம் மாத்திரமே விமானத்தைச் செலுத்தியுள்ளார்.

ஒரு விமானி மாதத்துக்குக் குறைந்தது 80 மணிநேரம் பறந்திருந்தால், இத்தகைய சிக்கல் ஏற்பட்டிருக்காது. உயர்தர விமான சேவையை வழங்குவதில் எமக்கு பெரும் பொறுப்பு உள்ளது. சிறீ லங்கன் எயார் லைன்ஸின் உரிமைகளைப் பாது காக்கும் நோக்கில் வேறு விமான நிறுவனங்களுக்கு இந்த விமானங்களை இயக்குவதற்கான உரிமையை வழங்கத் தீர்மானித்துள்ளேன் - என்றார்.

# வலி நிவாரணிகளை உட்கொள்ளும் மாணவர்களுக்கு மன உளைச்சல்!

## ஹெரோயின் பாவனையால் மனநல பாதிப்பும் உயர்வு

கொழும்பு, ஒக். 05

வலி நிவாரணிகளை அதிக அளவில் உட்கொள்வதன் காரணமாக பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்களிடையே கடுமையான மன உளைச்சல், வலிப்பு , வலிப்பு நோய்க்கான அறிகுறிகள் தோன்றுவதாக கண்டி தேசிய மருத்துவமனையின் உளவியல் மருத்துவர் கிஹான் அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி, இவ்வாறான நிலைமைகளில் சிறுவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்படும் போக்கு அதிகரித்து வருகிறது. பெரும்பாலும் பெற்றோர்கள் இவ்வாறான அறிகுறிகள் தென்படின் வலிப்பு நோய் என நினைப்பதாகவும் எனினும் வலிநிவாரணி மாத்திரைகளை தொடர்ந்து உட்கொள்வதே காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

“உலக மது ஒழிப்பு தினத்துடன் இணைந்து போதைப் பொருளின் அச்சுறுத்தலில் இருந்து நாட்டைக் காப்போம்” என்ற தொனிப்பொருளில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட நிகழ்வில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“ இதுவரை பதிவாகியுள்ள தரவுகளின்படி, இந்நாட்டில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் ஹெரோயின் போதை பொருளுக்கு அடிமையாகியுள்ளனர். அவர்களில் 6 ஆயிரத்துக்கும் அதிகமானோர் போதைப்பொருள் தடுப்பு ஊசியை பெற்றுக்கொள்வதற்கு ஆசைப்படுகின்றனர்.

ஹெரோயின் போதைப் பொருளை அதிகமாக உட்கொள்வதால் உடல் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகிறது. ஹெரோயின் கிடைக்காத போது, இளைஞர்கள் வலிமையான வலி நிவாரணிகளை பயன்படுத்த ஆசைப்படுகின்றனர். சிசேரியன் செய்த தாய் ஒருவரைவிட பாடசாலை மாணவர்கள் தினமும் வலிநிவாரணி மாத்திரைகளை பல மடங்கு அதிகமாக உட்கொள்கின்றனர் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

சில வருடங்களுக்கு முன்னர் மாத்தளை மாவட்டத்தில் 13 தொடக்கம் 18 வயதுக்கு இடைப்பட்ட பாடசாலை மாணவர்களிடம் நடத்தப்பட்ட சோதனையில் 28 வீதமான மாணவர்கள் போதைப் பொருளை பயன்படுத்தியுள்ளனர். 69 வீதமானோர் சிகிச்சை தேவைப்படும் நிலையில் காணப்படுவதாகவும் தெரியவந்துள்ளது - என்றார். (ஐ)

# பொலிஸ்மா அதிபரின் சேவை நீடிப்பு 9ஆம் திகதியுடன் நிறைவடைகிறது!

கொழும்பு, ஒக். 05

பொலிஸ் மா அதிபர் சி. டி. விக்ரமரத்னவுக்கு வழங்கப்பட்ட 3 மாத சேவை நீடிப்பு எதிர்வரும் 9ஆம் திகதியுடன் நிறைவடைய உள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபரின் பதவிக்காலம் முடிவடைந்த போதும், இதுவரை அவருக்கு இரு தடவைகள் சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது.

2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கையின் 35ஆவது பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்ட சி. டி. விக்ரமரத்ன, மார்ச் 25 ஆம் திகதி ஓய்வுபெறவிருந்த போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முதல் தடவையாக அவருக்கு 3 மாத கால நீடிப்பு வழங்கியிருந்தார்.

முதல் சேவை நீட்டிப்பு நிறைவடைந்ததையடுத்து, கடந்த ஜூன் 09ஆம் திகதி முதல் மூன்று மாத காலத்துக்கு இரண்டாவது சேவை நீட்டிப்பு வழங்கப்பட்டது. இந்த சேவை நீட்டிப்பு இம்மாதம் 9ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

பொலிஸ் மா அதிபர் பதவிக்கு மற்றுமொரு அதிகாரி நியமிக்கப்படுவாரா அல்லது சி.டி.விக்ரமரத்னவுக்கு மீண்டும் சேவை நீடிப்பு வழங்கப்படுவதா என்பது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(ஐ)

## நீதி தேவதைக்கு...

உள்ளிட்டோர், நீதி தேவதையின் உருவச் சிலைக்கு கறுப்புத் துணி கட்டி, நீதி தேவதையின் கையில் உள்ள தராசு ஒரு பக்கமாக தாழ்ந்து இருக்கக் கூடிய வாறு, நீதி தேவதையின் உருவ சிலையை காட்சிப்படுத்தி போராட்டத் தில் ஈடுபட்டு இருந்தனர்.

பின்னர் சட்டத்தரணிகள், அரசியல் வாதிகள் எனப் போராட்டத்தில் கலந்து கொண்டோர் நீதி தேவதையின் உருவ சிலைக்கு முன் மண்டியிட்டு, நீதி கோரி னர். (அ)

## முல்லைத்தீவு...

புதன்கிழமைகளில் நடைபெறும் மாங் குளம் நீதிமன்றத்தின் செயற்பாடுகள் நேற்று இடம் பெற்றதாக தெரிவிக்கப்ப ட்டது.

எனினும் குறித்த இரண்டு நீதிமன்றங் களுக்கும் சட்டத்தரணிகளின் எவரும் செல்லவில்லை என தெரிவிக்கப்பட் டது. (அ)

## சீனாவின்..

ஆசிய மற்றும் மேற்குலக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இம்மாத நடுப்பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீன விஜயத்தின் போது சீன ஜனாதிபதியை சந்தித்து கடன் தள்ளுபடி தொடர்பில் கலந்துரை யாடவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின் றன.

இதேவேளை, இந்தியாவிற்கும் மேற் குலகிற்கும் நெருக்கமான கொள்கையை பின்பற்றியதால் சர்வதேச நாணய நிதி யத்தின் ஒப்பந்தத்தை சீனா தடுத்து இலங்கையை தண்டித்துள்ளதாக குறிப் பிட்டுள்ளன.

அத்துடன், இம்மாத இறுதியில் மொரோக்கோவில் நடைபெறவுள்ள சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி மாநாட்டிற்கு முன்னதாக, இந் தியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இலங்கையுடன் கடன் குறைப்பு உடன்படிக்கையை மேற்கொள்ள வுள்ளன.

எவ்வாறாயினும், கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரி வித்த மத்திய வங்கியின் ஆளுநர் கலா நிதி நந்தலால் வீரசிங்க, சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணை விரை வில் கிடைக்கும் என நம்பிக்கை வெளி யிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## திடீர்...

ஏற்பட்டது.

சில ரயில் நிலையங்களில், பயணிகள் நிலைய அதிபர்களுக்கு எதிராக அடாவ டியாக நடந்து கொண்டதால், பயணச் சீட்டு வழங்குவது இடைநிறுத்தப்பட் டுள்ளதுடன், தெஹிவளை, பம்பலப் பிட்டி, மருதானை போன்ற பல நிலை யங்களில் நிலைய அதிபர்கள் சேவையிலிருந்து விலகியுள்ளனர்.

ரயில் கட்டுப்பாட்டாளர்கள் சங்கம் ஆரம்பித்துள்ள திடீர் பணிப்புறக் கணிப்பு காரணமாக நேற்று மாலை பல ரயில்கள் தாமதமாக வரலாம் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள் ளது.

நேற்று காலை மாளிகாவத்தை ரயில் தளத்தில் பிரதி கட்டுப்பாட்டாளர் ஒரு வருக்கும் ரயில் பாதுகாப்பு அதிகாரி ஒருவருக்கும் இடையில் மோதல் ஏற் பட்டுள்ளது.

பாதுகாப்பு உத்தியோகத்தர் பிரதி கட்டுப்பாட்டு அதிகாரியை தாக்கியுள்ள தாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதோடு, தாக்குதலுக்கு உள்ளான ஊழியரின் சேவையை இடைநிறுத்துமாறு கோரி ஒழுங்குபடுத்தும் தொழிற்சங்கம் இந்த தொழில் நடவடிக்கையை ஆரம்பித் துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திடீர் வேலை நிறுத்தம் காரணமாக நேற்று மதியம் வீடுகளுக்கு செல்ல வந்த பயணிகள் கடும் அவதிக்குள்ளாகினர். (அ)

## உயர்தர....

பரீட்சைக்கு விண்ணப்பிக்க எதிர் பார்த்திருந்தும் இதுவரை விண்ணப் பங்களை சமர்ப்பிக்க முடியாத விண் ணப்பதாரர்களுக்கு மாத்திரம் ஒன்லை னில் விண்ணப்பிக்க 5 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, விண்ணப்பதாரர்க ளுக்கு இம்மாதம் 06 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை ஒன்லைனில் விண்ணப்பிக்க அவகாசம் வழங்கப்பட் டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல் களை 1911 எனும் துரித தொலைபேசி இலக்கத்திற்கோ, 011 2 784 208 அல்லது 011 2 784 537 அல்லது 011 2 786 616 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கோ அழைப்பினை மேற்கொண்டு பெற்றுக் கொள்ள முடியுமென திணைக்களம் மேலும் கூறியுள்ளது. (அ)

## நீதிபதியை...

2 ஆயிரம் வருடங்கள் பழைமையான எமது பௌத்த புராதான சின்னத்தில், பொங்கல் வைத்து வழிபட்ட நீதிமன்றம் அனுமதி அளித்தது. அப்போது முன் னாள் வடமாகாணசபை உறுப்பினர் ரவி கரன், முல்லைத்தீவு நீதிபதியுடன் பேசிய காரணத்தினால், நானும் எனது கருத் துக்களை முன்வைக்க நீதிபதியிடம் அனுமதி கேட்டிருந்தேன்.

எனினும், எனக்கு அனுமதி மறுக் கப்பட்டது.நான் முன்னாள் இராணுவ அதிகாரி என்பதாலும், எனக்கு சட் டங்கள் தெரியும் என்பதாலும், நீதி பதியொருவர் கருத்து வெளியிட மறுத் தமையால், நானும் அமைதி யாகிவிட் டேன். பாராளுமன்றிலும், குருந்தூ ர்மலையில் பொங்கல் நிகழ்வை நடத்த அனுமதியளித்தமை தவறு என்றும் இது இந்து- பௌத்த மக்களிடையே தேவை யற்ற பிரச்சனைகளை ஏற்படுத்தும் என்றுதான் கூறியிருந்தேன். இதனை நான் இன்றும் கூறுவேன். இது எப்படி அச்சுறுத்தலாகும்?

அந்த சம்பவத்திற்குப் பின்னர் நான் குறித்த நீதிபதியை சந்திக்கக்கூட இல்லை. முல்லைத்தீவு நீதிபதிக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றில் 5 வழக்குகள் உள்ளன.இந்த வழக்குகள் தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழு ஊடாக தனக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சட் டமா அதிபரிடம் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். இந்த நிலையில், அவ ரது தீர்ப்பை மாற்று மாறு ஒரு போதும் அழுத்தம் பிரயோகிக்க வில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் தற் போது தெரிவித்துள்ளது.

அப்படி அழுத்தம் பிரயோகிக்கப்பட்டி ருந்தால், அவர் இதுதொடர்பாக பிடி யாணையொன்ற பிறப்பித்திருக்கவும் முடியும். அவர் வெளிநாடு செல்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக, அவரதுவாக னத்தை விற்பனை செய்து, வெளி நாட் டுத் தூதுவர்கள் இருவரை அவர் சந்தித் துள்ளார்.பொலிஸ் பாதுகாப்பும் அவ ருக்கு குறைக்கப்படவில்லை என பொலிஸ் தரப்பிலிருந்து தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆனால், அவரது மனைவியோ, இவ ரால் தனக்கு தொடர்ந்தும் பிரச்னைகள் ஏற்படுத்தப்படுவதாக நீதிச் சேவை ஆணைக்குழுவில் முறைப் பாடொன் றையே அளித்துள்ளார். முல்லைத்தீவு பொலிஸிலும், இது தொடர்பாக அவ ரது மனைவி முறைப்பாடு செய்துள் ளார்.இதில், குறித்த நீதிபதி மனநலம் பாதிக்கப்பட் டவர் என்றும் மனநல வைத்தியர்கள், இவருக்கு வைத்தியம் பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தனக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக நீதிபதி கூறுவாராயின், அது யாரால் என்பதை அவர் வெளிப்படையாகக் கூறவேண் டும். ஜனாதிபதி, பொதுப் பாதுகாப்பு அமைச்சர் உள்ளிட்டோர், இந்த விட யம் தொடர்பாக விசாரணை செய்ய குழுக்களை நியமித்துள்ளனர்.

இந்தக் குழுக்கள் உடனடியாக விசார ணைகளை செய்து, உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் என்று நாமும் கேட்டுக்கொள்கிறோம்-என்றார். (அ)

# எரிவாயு விலை உயர்வு

கொழும்பு, ஒக். 05

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் உள்நாட்டு எரிவாயுவின் விலைகளை அதிகரித்துள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி 12.5 கிலோ எடை கொண்ட எரிவாயு சிலிண்டர் 343 ரூபாய் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 3,470 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் 5 கிலோ எடைகொண்ட எரிவாயு சிலிண்டர் 137 ரூபாய் அதிகரிக் கப்பட்டு புதிய விலை 1,393 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2.3 கிலோ எடைகொண்ட எரிவாயு சிலிண்டர் 63 ரூபாய் அதிக ரித்து புதிய விலை 650 ரூபாயாக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, லாப் நிறுவனமும் விலை திருத்தத்தை அறிவித்துள்ளது.




அதன்படி 12.5 கிலோ எடை கொண்ட எரிவாயுவின் விலை 150 ரூபாய் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 3,985 ரூபாயாக நிர்ணயிக்கப்பட் டுள்ளது.

5 கிலோ எடைகொண்ட எரிவாயு வின் விலை 60 ரூபாய் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 1,595 ரூபாயாக நிர்ணயிக் கப்பட்டுள்ளது. (அ)

# உணவுப் பற்றாக்குறை அபாயம்!

## விவசாய அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 05

நாட்டில் ஏற்பட்டுள்ள திடீர் கால நிலை மாற்றத்தின் தாக்கத்தினால் உணவுப் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் அபா யம் ஏற்பட்டுள்ளதாக விவசாய அமைச் சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நேற்றுக் காலை விவசாய அமைச்சில் உணவுப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டங்களை நடை முறைப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

இந்நிலையில், தோட்டங்களில் மரக் கறிகளை பயிரிடும் திட்டமும், இந்தப் பருவத்துக்கான உணவுப் பயிர்த் திட் டமும் உடனடியாக நடைமுறைப் படுத்துமாறு விவசாயச் செயலாளர் குணதாச சமரசிங்கவுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்திருந்தார்.

கடந்த சில நாட்களாக நிலவி வரும் கடும் வறட்சி காரணமாக சுமார் 70,000 ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளது



டன், தற்போது பல மாகாணங்களில் பெய்து வரும் தொடர் மழையினால் அறுவடை செய்யப்படவிருந்த நூற் றுக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்களும் அழிவடைந்துள்ளன.

தாழ்வான பகுதிகளில் மரக்கறி பயிர்களும் மழையினால் நாசமாகி யுள்ளன. அம்பாந்தோட்டை மாவட் டத்தில் சுமார் 15,000 ஏக்கர் வெண் டிக்காய் தோட்டங்களும் முற்றாக அழிக் கப்பட்டுள்ளதாக" அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# அரச மருத்துவமனைகளில் சிகிச்சை; 25 சதவீதத்தால் அதிகரித்துள்ளது!

கொழும்பு, ஒக். 05

கடந்த ஒன்பது மாதங்களில் மாத்தி ரம் அரசாங்க மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டவர் களின் எண்ணிக்கை 25 சதவீதமாக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச் சர் கெஹலிய ரம்புக் வெல தெரி வித்துள்ளார். கொழும்பில் இடம் பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின் போதே சுகாதார அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த ஒன்பது மாதங் களில் மாத்திரம் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெறும் நோயா ளிகளின் எண்ணிக்கையும் 42 சத வீதமாக அதி கரித்துள்ளதாக கூறிய அவர், தனியார்



வைத்தியசாலை களில் சிகிச்சை பெற நோயாளிகளின் ஆர்வம் குறைந்து வருவதே இந்த உயர்வுக்கு காரணம் என்றும் சுகாதார அமைச்சர் கூறினார்.

## நீதிபதி...

விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி என்பனவற்றின் ஏற்பாட்டிலும் ஆதரவு டனும் இந்த மனித சங்கிலிப் போராட் டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் புதிய ஜனநாயக மார்க்சிச லெனி னிசக் கட்சி என்பனவும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவை வழங்கின.

நாடாளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், சி.வி.விக் னேஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதி ராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம். கே.சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், முன்னாள் யாழ்ப்பாணம் மாநகர மேயர் வி.மணிவண்ணன், முன் னாள் வடக்கு மாகாண சபை உறுப்பி னர்களான சட்டத்தரணி கே.சயந்தன், து.ரவிகரன், க.சர்வேஸ்வரன், பா.கஜ தீபன், எஸ்.சுகிர்தன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ், புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் உள் ளிட்ட அரசியல் பிரமுகர்கள், சட்டத்தர ணிகள், மதத்தலைவர்கள், யாழ். பல் கலைக்கழக சமூகத்தினர், வர்த்தக சங்கத்தினர், பொதுமக்கள் உட்படப் பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# மன்னாரில் மாபெரும் கவனவீர்ப்பு போராட்டம்

## அரசியல் பிரதிநிதிகள் பங்கேற்பு



மன்னார், ஒக். 05

மன்னாரில் 'சுயாதீன நீதித் துறையில் அரசியல் தலையீட்டை தடுப்போம்' எனும் தொனிப்பொருளில் நீதித் துறைக்கு எதிரான அடக்கு முறையை கண்டித்து கவன யீர்ப்புப் போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப் பட்டது.

மன்னார் மாவட்ட இளைஞர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்பினர் இணைந்து இப்போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன் போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கறுப்பு கொடிகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடு பட்டனர். குறித்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப் பினர் செல்வம் அடைக்கலநாதன்,சட்டத்தரணி செல்வ ராசா டினேசன்,உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்கள்,உறுப்பினர்கள்,மன்னார் சமூக பொருளா தார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் தலைவர் யாட்சன் பிகிராடோ,பணியாளர்கள்,பொது அமைப்பு களின் பிரதிநிதிகள் இளைஞர்கள் எனப் பலர் பங் கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மாற்று யோசனைகளை பரிசீலிக்க நான் தயார்!

## பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில்



கொழும்பு, ஒக். 05

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான மாற்று யோசனைகளை பரிசீலிக்க தான் தயார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய ஜனாதிபதி, இதற்காக அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து செயற்படத் தயார் என்றும் கூறினார்.

இந்த இக்கட்டான தருணத்தில் நாட்டின் பொருளா தாரத்தை வலுப்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றி ணைந்து செயற்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி கேட் டுக்கொண்டார்.

தங்கள் பிரச்னைகளுக்கான தீர்வை பாராளுமன்றத் தின் ஊடாக பொதுமக்கள் எதிர்பார்க்கும் இந்த தருணத் தில் பொதுவான கட்டமைப்பின் கீழ் அனை வரும் பணியாற்ற வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# நேற்றும் பாங்கொக்குக்கான விமானம் தாமதமானது!

கொழும்பு, ஒக். 05

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பயணிக்க காத்திருந்த ஸ்ரீலங்கன் எயார் லைன் ஸின் விமான மொன்று நேற்றும் தாமதமடைந்துள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்கவிலிருந்து பாங்கொக் நோக்கி அதி காலை 1.10 மணிக்கு புறப்படவிருந்த சிறீலங்கன் எயார் லைன்ஸின் யூ.எல் 403 என்ற விமானம் நேற்று பிற்பகல் வரை பயணத்தை முன்னெடுக்காததால் பயணிகள் பெரி தும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந்த விமானம் அதிகாலை 1.10 மணிக்கு புறப்பட்டு காலை 8.30 அளவில் பாங்கொக் விமான நிலையத்தை அடைந்து பின்னர் முற்பகல் 10.40மணிக்கு மீண்டும் கட்டுநாயக்கா விமான நிலையத்தை நோக்கி பயணத்தை ஆரம்பிக்க திட்டமிட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக் கது. (ஐ)

# சகல இறக்குமதி கட்டுப்பாடுகளும் அடுத்த வாரத்தில் தளர்த்தப்படும்!

## இராஜாங்க அமைச்சர் செஹான் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 05

**தனியார் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய இறக்குமதிகள் மீதான சகல கட்டுப்பாடுகளையும் அடுத்த வாரம் தளர்த்த எதிர்பார்த்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேம சிங்க தெரிவித்தார்.**

இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவது தொடர் பாக பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய நிதி இராஜாங்க அமைச்சர், தேவையான உத்தரவுகள் விரை வில் வெளியிடப்படும் என கூறினார்.

இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் காரணமாக இலங்கைச் சுங்கத்தின் வருமானம் வெகுவாக குறைந்துள் ளது என்றும் இது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோரின் வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் ஏற்றுமதியை பாதித்துள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மேலும் தெரிவித்தார்.

ஆகவே இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவது நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்த உதவும் என அரசாங்கம் நம்புவதாகவும் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க குறிப்பிட்டார். (அ)

# சர்வதேச விசாரணை குறித்து ஜனாதிபதி கூறுவதே சரியானது

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த சொல்கிறார்



கொழும்பு, ஒக். 05

சர்வதேச விசாரணை தொடர்பில் ஜனாதி பதி ரணில் விக்ரமசிங்க கூறுவது சரியான விட யமாகும் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று மத வழிபாட்டில் ஈடு பட்ட பின்னர் செய்தி யாளர்களை சந்தித்த மகிந்த ராஜபக்ஷவிடம், "சர்வதேச ஊடகங்களிடம் கோபமாகவும் காரசாரமாகவும் பேசிய வர்களில் நீங்களும் ஒருவர். ஆனால் இன்று ரணிலும் அவ்வாறான ஒரிடத்துக்கு சென்றிருப்பது பற்றி என்ன நினைக்கின்றீர்கள் என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளித்தவர், அப் படித்தான் செய்ய வேண் டும். அதுதான் சரியான விடயம். சனல் 4 தொலைகாட் சிக்கு விரும்பியது போன்று இங்கு ஆட முடியாது - என் றார்.

அத்துடன் சமூக ஊடகங் களை முடக்குவது தொடர்பில் அவரிடம் தகவல் வினவப்பட்டது. அதற்கு பதிலளித்தவர் சமூக ஊடகங்களை முடக்க முடியாது. அதற்கு யாரும் ஆதரவளிப்பதில்லை எனவும் குறிப் பிட்டுள்ளார்.

இதேவேளை, மக்களுக்கு தேவையான நிவாரணம் வழங்க வேண்டும். நாங்கள் எப்போதும் மக்கள் பக்கமே உள்ளோம். மேலும் மின்சார நிவாரணம் வழங்குவது தொடர்பில் ஆரா யப்பட்டு வருகின்றது. அதற்கு விரைவில் பதில் கிடைக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

மீண்டும் ஆட்சியமைப்பது குறித்து மகிந்தவிடம் வினவிய போது, நான் ஆட்சி அமைத்த வரை போதும் என நினைக்கிறேன். இனி புதிய தலைமைத்து வங்கள் முன்னோக்கி செல்ல வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

# யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் இந்தியாவில் தங்கப் பதக்கம் வென்றார்!

யாழ்ப்பாணம், ஒக். 05

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றும் கலாநிதி நித்தியப்பிரியா சிவராம், இந்தியாவின் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்து வப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட பட்டமேற் படிப்பு குழந்தை மருத்துவத்துறையில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கத்திற்கு தகுதி பெற்றுள்ளார்.

சித்த மருத்துவத்தில் குழந்தை மருத்துவத்துறையில் இலங்கையிலிருந்து சென்று பட்டமேற்படிப்பை முடித்து வந்த இரண்டாவது மருத்துவர் என்ற பெருமையை கலாநிதி நித்தியப்பிரியா சிவராம் பெற்றுள்ளார்.

அத்துடன், வரலாற்றில் இலங்கையிலிருந்து சென்று தங்கப்பதக்கத்தைப் பெற்ற முதல் மருத்துவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மாணவர்களுக்கு 3,000 ரூபா காசோலை

கொழும்பு, ஒக். 05

பாடசாலை மாணவர்களுக்கு இரண்டு வாரங்களில் பாதணி களை கொள்வனவு செய்வதற் காக 3,000 ரூபாய் பெறுமதி யான காசோலை வழங்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இதேவேளை மாணவர்க ளுக்கு வழங்கப்படும் இந்த கொடுப்பனவு எதிர்வரும் வரு டத்தில் அதிகரிக்கப்படும் என வும் அவர் கூறினார். (அ)



# நாட்டில் சீரற்ற வானிலை காரணமாக 30,000 இற்கும் மேற்பட்டோர் பாதிப்பு!

கொழும்பு, ஒக். 05

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக 12 மாவட் டங்களைச் சேர்ந்த 30,000 க்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள் ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அனர்த்த முகா மைத்துவ நிலையம் வெளியிட் டுள்ள அறிக்கையில், நாட்டில் பெய்துவரும் கடும் மழை மற்றும் பலத்த காற்றினால் 7,699 குடும் பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முக்கியமாக வெள்ளத்தினால் 18,800 க்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கம்பஹா மாவட்டமே மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட பிர தேசமாக இனம் காணப்பட்டுள் ளது.

இதேவேளை பலத்த மழை மற்றும் காற்றினால் 628 வீடுகள் சேதமடைந்துள்ளதோடு 109 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட் டுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள் ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




## முதல் சர்வதேச விக்கெட்டை வீழ்த்தினார் வியாஸ்காந்த்

கொழும்பு, ஒக். 05

ஆசிய விளையாட்டுப்போட்டிகளில் இலங்கை அணியில் இடம்பெற்றுள்ள யாழ்ப்பாணத்தை சேர்ந்த முதலாவது வீரர் விஜயகாந் வியஸ்காந் சர்வதேச போட்டிகளில் நேற்றுமுன்தினம் தனது முதலாவது விக்கெட்டை கைப்பற்றியுள்ளார்.

ஆப்கானிஸ்தானிற்கு எதிரான போட்டியில் அவர் தனது முதலாவது விக்கெட்டை வீழ்த்தினார்

நான்கு ஓவர்கள் பந்துவீசிய வியாஸ்காந் 28 ஓட்டங்களை கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

# விரும்புவது எல்லா நேரமும் கிடைப்பது சாத்தியமில்லை

## ரோஹித் சர்மா

புதுடில்லி, ஒக். 05

"எல்லா நேரமும் ஒருவர் விரும்புவது கிடைப்பது என்பது சாத்தியமில்லாத ஒன்று" என இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் ரோகித் சர்மா தெரிவித்துள்ளார்.

ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடர் இன்று ஆரம்பமாகிறது. இந்தத் தொடர் எதிர்வரும் முதல் நவம்பர் 19ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெறுகிறது.

இன்று சென்னையில் நடக்கும் முதல் போட்டியில் இந்திய அணி அவுஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது. இந்திய அணிக்கு தலைமை தாங்கும் அணித் தலைவர் ரோகித் சர்மா,

அணித் தலைவராக முதல் ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கும் ரோகித் சர்மா, தலைமை பற்றி மனம் திறந்துள்ளார். இதுகுறித்து அவர் அளித்த பேட்டி ஒன்றில்,

"என்னைப் பொறுத்தவரை ஓர் அணியின் தலைவராக இருப்பதற்கு சிறந்த நேரம் 26 - 27 வயது. ஏனென்றால், அந்த வயதில் ஒரு வீரர் உச்சத்தில் இருப்பார். ஆனால், எல்லா நேரமும் ஒருவர் விரும்புவது கிடைப்பது என்பது சாத்தியமில்லாத ஒன்று.

இந்திய அணியின் தலைமை பற்றி பேசினால், இந்திய அணியில் பல ஜாம்பவான்கள் இருந்திருக்கிறார்கள். பல வீரர்கள் தலைமைப் பொறுப்பை வகித்திருக்கிறார்கள். எனக்கு முன்பாக டோனி, விராட் இருவரும் தலைவர்களாக இருந்தனர். அவர்களை போல



எனது முறைக்கு நான் காத்திருக்க வேண்டியிருந்தது. காத்திருப்பு முற்றிலும் நியாயமானது. அதேநேரம் கௌதம் கம்பீர், வீரேந்திர சேவாக் போன்ற அணித் தலைவராக முடியாத வீரர்களும் அணியில் இருந்துள்ளனர். இந்திய கிரிக்கெட்டில் தலைசிறந்த வீரர்கள் இவர்கள்.

அதேபோல், யுவராஜ் சிங்கை மறந்துவிடக் கூடாது. யுவராஜ் இந்திய அணிக்கு தலைவராக இருந்ததில்லை. ஆனால், அவர் ஒரு போட்டி வெற்றியாளர். அவரும் ஒருகட்டத்தில் தலைவராக இருந்திருக்க வேண்டும். அவருக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. அதுதான் வாழ்க்கை. எனக்கு இப்போது வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதற்கு நன்றியுள்ளவனாக இருக்க விரும்புகிறேன்" என்று ரோகித் சர்மா குறிப்பிட்டுள்ளார்.

# பயிற்சி ஆட்டங்களில் இலங்கை தோல்வி!

புதுடில்லி, ஒக். 05

உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்னோடியாக நடைபெற்ற பங்களாதேட்டனான பயிற்சி போட்டியை தொடர்ந்து ஆப்கானிஸ்தானுடனான பயிற்சி போட்டியிலும் இலங்கை தோல்வி அடைந்தது.

பங்களாதேஷிடம் கடந்த வெள்ளிக்கிழமை 7 விக்கெட்களால் தோல்வி அடைந்த இலங்கை செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போட்டியில் ஆப்கானிஸ்தானிடம் டக்வேர்த் லூயிஸ் முறைமையின் பிரகாரம் 6 விக்கெட்களால் தோல்வி அடைந்தது.

இலங்கை சார்பாக குசல் மெண்டிஸ் அதிரடியாக துடுப்பெடுத்தாடி சதம் குவித்த போதிலும் அது கடைசியில் வீண் போனது.

இந்த இரண்டு தோல்விகளும் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கு முன்னதாக இலங்கைக்கு பெரும் ஏமாற்றத்தை கொடுத்திருக்கும் என்பதுடன் உலகக் கிண்ண போட்டிகளை சிறந்த இலங்கை வியூகங்களுடன் எதிர்கொள்ளவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியுள்ளது.

அந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இலங்கை 46.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 294 ஓட்டங்களைக் குவித்தது.

ஒரு பக்கத்தில் விக்கெட்கள் சரிந்த போதிலும் குசல் மெண்டிஸ் தனி ஒருவராக பிரகாசித்து 87 பந்துகளை எதிர்கொண்டு 19 பௌண்டரிகள், 9 சிக்ஸர்களுடன் 158 ஓட்டங்களைக் குவித்து சுயமாக ஆட்டம் இழந்தார்.

அவரை விட துடுப்பாட்டத்தில் சதீர சமரவிக்ரம (39), பெத்தும் நிஸ்ஸன்க (30), தனஞ்சய டி சில்வா (22) ஆகிய மூவரே 20 ஓட்டங்களுக்கு மேல் பெற்றனர்.

குசல் மெண்டிஸ்ம் சதீர சமரவிக்ரமவும் 3ஆவது விக்கெட்டில் 158 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

பந்துவீச்சில் மொஹமத் நபி 44 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

42 ஓவர்களில் 257 ஓட்டங்கள் என்ற திருத்தப்பட்ட




வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் 38.1 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 261 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

ரஹ்மானுல்லா குர்பாஸ், ரஹ்மத் ஷா ஆகிய இருவரும் திறமையாக துடுப்பெடுத்தாடி 2ஆவது விக்கெட்டில் 212 ஓட்டங்களைப் பகிர்ந்து ஆப்கானிஸ்தானின் வெற்றியை இலகுபடுத்தினர்.

குர்பாஸ் 92 பந்துகளில் 9 சிக்ஸ்கள், 8 பௌண்டரிகளுடன் 119 ஓட்டங்களைப் பெற்று சுயமாக ஆட்டமிழந்தார். அவரைப் போன்றே ரஹ்மத் ஷாவும் 93 ஓட்டங்களுடன் சுயமாக ஆட்டம் இழந்தார். இருவரும் மொத்த எண்ணிக்கை 231 ஓட்டங்களாக இருந்தபோது ஆட்டம் இழந்தனர்.

நஜிபுல்லா ஸத்ரான் 15 ஓட்டங்களுடனும் அஸ்மத்துல்லா ஓமர்ஸாய் 14 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் கசுன் ராஜித்த 3 ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக 7 ஓவர்களை கட்டுப்பாட்டுடன் வீசி 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

# உலக கிண்ண தொடர் இன்று ஆரம்பம்; ஆரம்பவிழா நிகழ்வுகள் திடீர் இரத்து!

புதுடில்லி, ஒக். 05

இந்தியாவில் இன்று வியாழக்கிழமை உலகக் கிண்ண தொடர் ஆரம்பமாகிறது. இந்த நிலையில் நேற்று நடைபெறவிருந்த ஆரம்பவிழா நிகழ்வுகளை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை இரத்து செய்தது.

நேற்றிரவு 7 மணிக்கு அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெறவிருந்த ஆரம்ப விழா நடத்தப்படுவதற்கு 24 மணித்தியாலங்கள் கால அவகாசம் இருந்த நிலையிலேயே திடீரென இரத்து செய்ய பி.சி.சி.ஐ. தீர்மானித்துள்ளது.

இந்த திடீர் முடிவுக்கான காரணம் வெளியாகவில்லை, உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி வரலாற்றில் அதிகாரபூர்வ ஆரம்ப விழா நடைபெறாத முதல் சந்தர்ப்பமாக இது அமைகின்றது. இந்தியாவின் முன்னணி கலைஞர்களாக ஆஷா போஸ்லே, சங்கர் மகாதேவன், ரன்வீர் சிங், அர்ஜித் சிங், ஸ்ரேயா கோஷல் உள்ளிட்ட கலைஞர்கள் பங்கேற்க விருந்தனர்.

இந்நிலையில், பாரம்பரிய ஆரம்பவிழாவுக்கு பதிலாக அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி அரங்கில் எதிர்வரும் 14 ஆம் திகதியன்று நடைபெறும் இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டிக்கு முன்னதாக சிறப்பு நிகழ்வை நடத்த பி.சி.சி.ஐ. தயாராக இருப்பதாக அதிகாரபூர்வமற்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும், பாதுகாப்பு காரணங்களுக்காக உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் இடம்பெறவுள்ள பல செயல்பாடுகள் தொடர்பில் எவ்வித முன் விளம்பரங்களும் இடம்பெறாதிருக்க ஏற்பாட்டாளர்கள் கவனம் செலுத்தி வருகின்றனர். (ஐ)

# எம். சி. சி. உலக கிரிக்கெட் குழு தலைவராக சங்ககார நியமனம்

லண்டன், ஒக். 05

மெரில்போன் கிரிக்கெட் கழக (எம். சி. சி.) உலக கிரிக்கெட் குழுவின் புதிய தலைவராக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்ககார நியமிக்கப்பட்டுள்ளார்.

குமார் சங்ககார 2021ஆம் ஆண்டு மெரில்போன் கிரிக்கெட் கழகத்தின் தலைவராக பணியாற்றிய நிலையில், தற்போது உலக கிரிக்கெட் குழுவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஏற்கனவே உலக கிரிக்கெட் குழுவின் உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

தற்போது இந்தக் குழுவில் குமார் தர்மசேனா, சௌரவ் கங்குலி, ஜூலன் கோஸ்வாமி, ஹீதர் நைட், சுசி பேட்ஸ், கிளேர் கானர், ஜஸ்டின் லாங்கர், இயன் மோர்கன், ரமீஸ் ராஜா, கிரேம் ஸ்மித் மற்றும் ரிக்கி ஸ்கெரிட் ஆகியோர் உள்ளனர்.

மார்க் நிக்கோலஸ் மெரில்போன் கிரிக்கெட் கழகத்தின் புதிய தலைவராக பொறுப்பேற்றுகிறார்.

இவர் ஹாம்ப்ஷயர் அணியின் முன்னாள் கேப்டனாகவும் மெரில்போன் கிரிக்கெட் கழக கிரிக்கெட் சந்தைப்படுத்தல் மற்றும் சட்டங்கள் குழுவில் அங்கம் வகித்ததுடன் கிரிக்கெட்டின் ஸ்பிரிட் கொள்கையை உருவாக்கிய சிறிய உழைக்கும் கட்சியில் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இந்திய பெருங்கடலில் சீனாவை எதிர்கொள்ளும் வலிமை இந்திய கடற்படைக்கு உள்ளதா?

ராகவேந்திர ராவ்



இந்திய பெருங்கடல் பகுதியில் அதிகரித்துவரும் சீன கடற்படையின் ஆதிக்கமும் செயல்பாடுகளும் இந்திய அரசுக்கும் பாதுகாப்பு நிபுணர்களுக்கும் கவலைக்குரியதாகவும் விவாதத்துக்கு உரியதாகவும் உள்ளது.

கிழக்கு லடாக்கில் உள்ள கல்வான் பள்ளத்தாக்கில் கடந்த 2020ஆம் ஆண்டில் நிகழ்ந்த ராணுவ மோதலுக்குப் பிறகு இரு நாடுகளுக்கும் இடையே பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. இந்தியா - சீனா இடையே நீண்டகாலமாக எல்லைப் பிரச்னை இருந்து வரும்நிலையில், கடந்த மூன்று ஆண்டுகளில் இது இன்னும் ஆழமடைந்துள்ளது.

இரு நாடுகளும் இந்திய பெங்கடல் பகுதியிலும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட விரும்புவதால் இந்த பகுதியில் பதற்றம் நிலவுவதாக பாதுகாப்பு நிபுணர்கள் கூறுகின்றனர்.

கடந்த சில ஆண்டுகளாக, சீனா தனது கடற்படையை நவீனமயமாக்கியுள்ளது. ஏராளமான விமான தாங்கிகள், போர்க்கப்பல்கள் மற்றும் ராணுவ நீர்மூழ்கிக் கப்பல்களை அந்நாட்டு கடற்படை கொண்டுள்ளது.

சமீபத்தில், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் இந்த விவகாரம் குறித்து பேசும்போது, "கடந்த 20-25 ஆண்டுகளாக, இந்தியப் பெருங்கடலில் சீன கடற்படையின் இருப்பு மற்றும் செயல்பாடு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. சீன கடற்படையின் அளவு மிக வேகமாக அதிகரித்து வருகிறது. எனவே, உங்கள் சுற்றுப்புறத்தில் இவ்வளவு பெரிய கடற்படை இருக்கும் போது, அதன் செயல்பாடுகள் உங்கள் பக்கத்தில் அவ்வப்போது தெரியும்." என குறிப்பிட்டார்.

சீன துறைமுக நடவடிக்கைகளை குறிப்பிடும்போது, குவாதர் மற்றும் இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகம் குறித்தும் பேசிய ஜெய்சங்கர், இந்தியாவின் முந்தைய அரசுகள் மீதும் விமர்சனத்தை வைத்தார்.

"இதன் முக்கியத்துவத்தையும் எதிர்காலத்தில் இந்த துறைமுகங்கள் எவ்வாறு செயல்படும் என்பதையும் அன்றைய அரசாங்கங்கள், கொள்கை வகுப்பாளர்கள் குறைத்து மதிப்பிட்டிருக்கலாம். எனவே, அவை நம் நாட்டின் பாதுகாப்பில் என்ன விளைவை ஏற்படுத்தும் என்பதை நாம் அனைவரும் இப்போது உன்னிப்பாக கண்காணிக்க வேண்டும். " என்றார்.

இந்தியக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, முன்பை விட மிகப் பெரிய அளவில் இருக்கும் சீனாவின் இருப்புக்கு ஏற்ப இந்தியா தயாராவது சரியாக இருக்கும் என்றும் ஜெய்சங்கர் கூறினார்.



**'முத்துச்சரம்' உத்தி**

இந்தியப் பெருங்கடலில் சீனா உருவாக்கி வரும் உத்தி "முத்துச் சரம்" என்று அழைக்கப்படுகிறது.

இந்த மூலோபாயம், இந்தியப் பெருங்கடலைச் சுற்றியுள்ள நாடுகளில் மூலோபாய துறைமுகங்கள் மற்றும் உள்கட்டமைப்பைக் கட்டமைத்து பாதுகாப்பதை உள்ளடக்கியது. தேவைப்பட்டால் ராணுவ நடவடிக்கைகளுக்காகவும் இந்த துறைமுகங்களை பயன்படுத்தலாம்.

சீனா தனது எரிசக்தி நலன்கள் மற்றும் பாதுகாப்பு நோக்கங்களைப் பாதுகாக்க மத்திய கிழக்கிலிருந்து தென் சீனக் கடல் வரையிலான கடல் வழிகளில் பல நாடுகளுடன் மூலோபாய உறவுகளை உருவாக்க உதவும் வகையில் இந்த "முத்துக்கள்" உருவாக்கப்படுவதாக நம்பப்படுகிறது.

ஆப்பிரிக்க கண்டத்தில் எத்தியோப்பியா, சோமாலியா, ஜிபூட்டி, எரித்திரியா ஆகியவை உள்ள பகுதி கொம்பு போன்ற் இருப்பதால் இவை ஹோர்ன் ஆப் ஆப்ரிக்கா (உழசெ ழக யகசஉைய) என்று அழைக்கப்படுகின்றன. இங்குள்ள ஜிபூட்டி மற்றும் பாகிஸ்தானில் உள்ள குவாடாரில் சீனா துறைமுகங்களை கட்டி வருகிறது. இதுதவிர, இலங்கையின் ஹம்பாந்தோட்டையை 99 வருட குத்தகைக்கு எடுத்துள்ளது. இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனாவின் கடற்படை செயல்பாடுகளையும் செல்வாக்கையும் அதிகரிக்க இந்தத் துறைமுகங்கள் உதவியாக உள்ளன.

**'சீனா நிரந்தர சவால்'**


பாதுகாப்பு நிபுணர் சி. உதய் பாஸ்கர் இந்திய கடற்படையில் தளபதியாக பணியாற்றி ஓய்வு பெற்றவர். தற்போது டில்லியில் உள்ள சொசைட்டி ஃபார் பாலிசி ஸ்டடீஸின் இயக்குநராக உள்ளார்.

இந்தியப் பெருங்கடலில் சீனா கடற்படையின் இருப்பு அதிகரித்து வருவதால் இந்தியா எதிர்கொள்ளும் ஆபத்து என்ன என்று அவரிடம் கேட்டோம்.

இதற்கு அவர், "அச்சுறுத்தல் என்பதை விட, இது ஒரு நிரந்தர சவால் என்று நான் கூறுவேன். இந்தியப் பெருங்கடல் பகுதியில், தளங்கள் மற்றும் உள்கட்டமைப்பை விரைவாக உருவாக்குவதன் மூலம், அந்த பகுதியில் தனது இருப்பைத் தக்கவைக்கும் திறன் இப்போது சீனாவிடம் உள்ளது. சீனா மிகவும் வலுவான கடல்சார் இருப்பைக் கொண்டுள்ளது, இது அதிகரித்து









வருகிறது. அதில் கடற்படை ஒரு முக்கிய அங்கமாக இருக்கிறது என்பது வெளிப்படையாக தெரிகிறது" என்று குறிப்பிட்டார்.

சீனாவின் கடற்படை மற்றும் கடல்சார் உள்கட்டமைப்பு குறித்து பேசிய அவர், "அவர்களின் நோக்கம் குறித்து நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் அதை என்ன செய்வார்கள்? இந்தியாவின் நலன்களுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் அவற்றை பயன்படுத்துவார்களா? போன்றவற்றை நாம் கவனமாக கண்காணித்துக்கொண்டே இருக்க வேண்டும்" என்கிறார்.

சரி சீனாவின் எண்ணம்தான் என்ன? "இந்தியப் பெருங்கடலில் சீனா எப்போதும் தனது வலுவான இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள விரும்புகிறது" என்றும் உதய் பாஸ்கர் கூறுகிறார்.

**சீனாவை எதிர்கொள்ளும் வலிமை இந்திய கடற்படைக்கு உள்ளதா?**

சீன கடற்படையின் செல்வாக்கு ஒருபக்கம் அதிகரித்துவரும் சூழலில், இது இந்தியாவுக்கு எவ்வளவு பெரிய அச்சுறுத்தலாக இருக்கும் என்றும் சீன கடற்படையுடன் ஒப்பிடும்போது இந்திய கடற்படையின் வலிமை எந்த நிலையில் உள்ளது என்றும் கேள்வி எழுகிறது.

சீன கடற்படையுடன் ஒப்பிடும்போது இந்திய கடற்படையின் வலிமை தற்போது சுமாராகவே உள்ளது என்கிறார் உதய் பாஸ்கர்.

"கடற்படையில் திறனை அடைவது என்பது மிகவும் மெதுவான மற்றும் ஆக்கப்பூர்வமான செயல்முறையாகும். ஒன்றிரண்டு விமானம் தாங்கி போர்க்கப்பல்களை வாங்கினால் மட்டும் போதாது. நீர்மூழ்கி திறன்கள், வான்வழி கண்காணிப்பு என பலவற்றிலும் கவனம் செலுத்த வேண்டும். "

வைஸ் அட்மிரல் அனுப் சிங், இந்தியாவின் கிழக்கு கடற்படையின் முன்னாள் தலைமைத் தளபதியாக இருந்து ஓய்வு பெற்றவர்.

இந்த விவகாரம் குறித்து அவர் பேசும்போது, "சீனாவிடம் 500 கப்பல்கள் கொண்ட கடற்படை உள்ளது என்பது முக்கியமில்லை. கடல்வழி விநியோகம், மக்களிடையே, குறிப்பாக மாலுமிகளிடையே தொழில்முறையை வளர்ப்பதிலும் சீனா இன்னும் நிறைய செய்ய வேண்டியிருக்கிறது. ஏவுகணைகளின் எண்ணிக்கைதான் கடைசியில் முக்கியமானது என்பது மறுப்பதற்கில்லை. அதேநேரம், கடற்படையின் தொழில்நேர்த்தி, தளவாட உதவி ஆகியவையும் முக்கியம். இந்தியப் பெருங்கடலில் தளவாட ஆதரவு மிகவும் முக்கியமானது" என்று தெரிவித்தார்.

சீனா அதிக எண்ணிக்கையில் பயணக் கப்பல்களை உருவாக்கியுள்ளது, ஆனால் எண்ணெய், உணவுப் பொருட்கள், நீர் போன்றவற்றை ஏற்றிச் செல்லும் துணைக் கப்பல்கள் அவர்களிடம் இல்லை என்றும் அனுப் சிங் கூறுகிறார்.

"இந்தியாவின் கடற்படை 138 கப்பல்களைக் கொண்டிருந்தாலும், புதிய கப்பல்களை கடற்படையில் இணைத்துக்கொள்வதை விட பழைய கப்பல்களை படையில் இருந்து நீக்கும் விகிதம் அதிகமாக இருப்பதால் தீபகற்ப நாடாக நம்மிடம் இன்னும் அதிக எண்ணிக்கையில் கப்பல்கள் உள்ளன. இது இந்தியா தன்னை சுற்றியுள்ள கடல் பகுதிகளை கட்டுப்படுத்தவும், ஆதிக்கம் செலுத்தவும் உதவுகிறது என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

**இந்திய கடற்படையின் கண்காணிப்பில் இருந்து தப்ப முடியாது**

நீர்மூழ்கி கப்பலாக இருந்தாலும் கூட, இந்திய கடல் பகுதியில் எதுவும் இந்திய கடற்படையின் கண்காணிப்பில் இருந்து தப்பிவிட முடியாது என்றும் அனூப் சிங் கூறுகிறார்.

"நீர்மூழ்கிக் கப்பல் ஒரு ஜலசந்தியைக் கடந்த பின்பு, அது நீரின் மேற்பரப்பிற்கு வரவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் கடல் சட்டம் தொடர்பான மாநாட்டில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் சீன இதை செய்வதில்லை. எனினும் நாம் அவர்களை கண்டுபிடித்து விடுகிறோம். அவர்களுக்கு எந்த வாய்ப்பையும் விட்டுக்கொடுப்பதில்லை" என்றார்.

அனூப் சிங்கின் கூற்றுப்படி, "ஜிபூட்டியில் காலூன்ற சீனாவிற்கு ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது, எதிர்காலத்தில் அவர்கள் குவாடாருக்கும் வரலாம், ஆனால் அவர்கள் இன்னும் தீபகற்ப இந்தியாவிலிருந்து வெகு தொலைவில் உள்ளனர்."

மேலும், சீன கடற்படையில் பணியமர்த்தப்பட்டுள்ள பல மாலுமிகள் கட்டாய சேவையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். எனவே, அவர்களிடம் தொழில்முறை திறன் குறைவாகவே இருக்கும் என்றும் அனூப் சிங் கூறுகிறார்.

"அவர்களின் மூத்த மாலுமிகள் மட்டுமே ஓரளவு தொழில்முறை வல்லுநர்கள். ஆனால், அவர்களும் குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளனர்" என்று அவர் தெரிவித்தார்.

# இணையப் பாதுகாப்பு விதிகளும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைபும் இன ஒடுக்கலுக்கு மேலும் வழி வகுக்கும்

அ. நிக்சன்

இணையங்கள் ஊடாக ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்ப்பதாகக் கூறிக் கொண்டு அரசாங்கம் வர்த்தமானியில் வெளியிட்டுள்ள இணையவழிப் பாதுகாப்பு எனப்படும் 'நிகழ் நிலைக்காப்புச் சட்ட வரைபு" (ழுடெiநெ ளுயகநவல டீடைட) அரசியல் - பொருளாதார நோக்கில் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்ற கருத்துக்கள் வலுப் பெற்றுள்ளன. இந்த வரைபு நடைமுறைக்கு வந்தால் விசேடமாக ஊடகத்துறை உள்ளிட்ட பேச்சுச் சுதந்திரம் மற்றும் கருத்துடைய பலரையும் கடுமையாக ஒடுக்கும் என்றே பொருள்கொள்ள முடியும். குறிப்பாகத் தமிழ் இன ஒடுக்கலுக்கு இந்த வரைபுகள் புதிய வியூகங்களில் வழி வகுக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

ஆனால் இணையவழிப் பாதுகாப்பு என்ற பெயரில் அதன் உள்ளடக்கத்தை ஒழுங்குபடுத்துவதையும், இணையப் பயனாளிகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதையும் இலக்காகக் கொண்டு இச் சட்ட வரைபைத் தயாரித்துள்ளதாக இலங்கை ஒற்றையாட்சி அரசாங்கம் நியாயப்படுத்துகின்றது.

இருந்தாலும் கருத்துச் சுதந்திரத்தின் மீதான அதன் சாத்தியமான தாக்கம் மற்றும் அரசாங்கம் மற்றும் அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் பற்றிய தணிக்கையின் ஆபத்துகள் தொடர்பான விவாதத்தையும் இந்த நகல் சட்ட வரைபு தோற்றுவித்துள்ளமை பட்டவர்த்தனம்.

நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு (**Prevention of Terrorism Act -PTA**) மாற்றாக உருவாக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (**Anti-Terrorism Act - ATA**) பற்றிய நகல் வரைபும், நிகழ் நிலைக்காப்புச் சட்டம் பற்றிய வரைபும் ஒரே நேரத்தில் வாத்தமானியில் வெளியிடப்பட்டுள்ளமைதான் இங்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த மாதம் 15, 18 ஆம் திகதிகளில் குறித்த இரண்டு வரைபுகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதைக் கண்டித்துள்ள இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம், அரசாங்கம் உடனடியாக இதனை விலக்கிக்கொள்ள வேண்டும் என்றும் கடும் தொனியில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழ் - முஸ்லிம் மக்கள் எவ்வாறான பாதிப்புகளை எதிர்கொள்வர் என்றும் கடந்த முப்பது வருடப் போரில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் தமிழர்கள் எதிர்கொண்ட விளைவுகள் பற்றியும் இந்த இரண்டு வரைபுகளையும் எதிர்ப்போர் கவனத்தில் எடுத்துப் பரிசீலிக்க வேண்டும்.

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மேற்படி இரண்டு நகல் சட்ட வரைபுகளுக்கும் இடையே பாரிய வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

1981 இல் யாழ் பொதுநூலகம், ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் ஆகியவை எரிக்கப்பட்ட நாளில் இருந்து கருத்துச் சுதந்திரம் இலங்கைத்தீவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியே வருகின்றது.

இருந்தாலும் 2023 செப்ரெம்பரில் முன்மொழியப்பட்டுள்ள நிகழ் நிலைக்காப்புச் சட்டம் பற்றிய வரைபு கருத்துச் சுதந்திரத்திற்கும் மாற்றுக் கருத்துக்களை முன்வைப்போரையும் சமகால அரசியல் நோக்கில் நேரடியாகக் குறிவைத்துள்ளது.

இதன் விதிகள் பின்வருமாறு

1) இணையப் பாதுகாப்புக்கான நிகழ் நிலைக்காப்புச் சட்டத்தின் செயலாக்கத்தை மேற்பார்வையிடவும் அதன் தீங்குகள் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்யவும் ஐந்துபேரைக் கொண்ட இணையப் பாதுகாப்பு ஆணைக்குழு (**Online Safety Commission**) ஒன்றை நியமித்தல்.

2) முறைப்பாடுகளின் அடிப்படையில் இணைய சேவை வழங்குநர்கள் (**Internet Service Providers - ISPs**) தங்கள் தளங்களில் இருந்து தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கத்தை அகற்றுதல்.

3) இணையத்தளச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவும் நிறுத்தவும் அதற்குரிய அறிவுறுத்தல்களை இணையச் சேவை வழங்குநர்களுக்கு உத்தரவிடவும் இணையப் பாதுகாப்பு ஆணைக் குழுவுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

4) குறித்த விதிகளுக்குக் கட்டுப்படாத இணைய சேவை வழங்குநர்கள் மற்றும் சமூக ஊடக நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கும் அதிகாரம் இந்த ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்த நான்கு விதிகளும் கருத்துச் சுதந்திரத்துக்குக் குறிப்பாக ஊடகச் செயற்பாடுகளுக்கு ஆபத்து என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆணைக்குழுவின் தீர்ப்புக்கு எதிராகவோ அல்லது அறிவுறுத்தல்களுக்கு (**Instructions**) எதிராகவோ இணைய சேவை வழங்குநகர்கள் மற்றும் பயனாளிகள் எவருமே நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க முடியாது.

தீங்கிழைக்கப்பட்டுள்ளதாகக் கிடைக்கபெறும் முறைப்பாடுகளை ஆராயும் சரியான வழிமுறைகள் பற்றிய விடயங்கள் நகல் வரைபின் உள்ளடக்கத்தில் தெளிவாக விபரிக்கப்படவில்லை.

ஆகவே இது முறையான மற்றும் தீங்கு விளைவிக்காத ஊடகச் செயற்பாடுகளுக்கும், தீங்கு விளைவிக்காத சமூகவலைத்தள கருத்துச் சுதந்திரத்தையும் இது தணிக்கை (**Censorship**) செய்யும் என்ற அச்சம் உண்டு.

இணையப் பாதுகாப்பு ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள கூடுதலான அதிகாரம் இந்த நகல் வரைபில் தெளிவாகக் காணப்படுகின்றது. இது சாத்தியமான தவறான பயன்பாடு மற்றும் எதிர்ப்பை அடக்குதல் பற்றிய கவலைகளை ஊடக மற்றும் சமூகவலைத்தளச் செயற்பாட்டாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மத்தியில் தோற்றுவித்துள்ளது.

ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்படவுள்ள ஐந்து உறுப்பினர்களும் நேரடியாக ஜனாதிபதியின் தெரிவாக இருப்பதால், நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களை இந்த வரைபு மேலும் விரிவுபடுத்தப்படுவதை ஆதரிக்கிறது என்றும் பொருள் கொள்ள முடியும்.

ஆகவே இணையச் செயற்பாடுகள் பற்றிய ஆணைக்குழுவின் இறுதி முடிவு ஜனாதிபதிக்கும் அவருடைய அரசாங்கத்துக்கும் அரசியல்வாதிகளுக்கும் பாதுகாப்பாக இருக்கும் என்பதில் ஐயமேயில்லை.

வரைபின் சில உட்பிரிவில் இன - மத வெறுப்புப் பேச்சைத் தவிர்த்தல் என்ற போர்வையில் பௌத்த குருமாரின் அத்துமீறல் செயற்பாடுகளுக்கு மறைமுகமாக இடமளிக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கு உள்ளிட்ட இருபத்து இரண்டு மில்லியன் இலங்கைத்தீவு மக்களுக்கு எது உண்மை எது பொய் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரங்களை ஆணைக்குழு தன்னிச்சையாகக் கொண்டிருக்கிறது. இந்த ஆணைக்குழுவில் தமிழ்ப் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பரா இல்லையா என்பதும் சந்தேகமே.

அதேவேளை வரைபில் பதினான்கு குற்றங்களின் பட்டியலில் சிறுவர்கள் குழந்தைகள் மற்றும் பெண்களை இணையத்தின் மூலம் துஸ்பிரயோகம் செய்யும் தீங்கான செயற்பாடுகளில் இருந்து பாதுகாக்கும் ஏற்பாடுகளும் உண்டு.

குறிப்பாக இணையவழி மோசடிகள் மூலம் ஏமாற்றுதல் மற்றும் பழிவாங்கும் ஆபாசப் படங்களையும் வீடியோ காட்சிகளையும் வெளியிட முடியாது.

ஆனால் சிறுவர்கள், பெண்கள் பற்றிய இணையப் பாதுகாப்பு விதிகள் ஏற்கனவே உள்ள சட்டங்களில் உண்டு. நிகழ் நிலைக்காப்புச் சட்டத்தின் மூலம் அவற்றை மீளவும் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை என்று இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது.

**ஜே.வி.பி போன்ற சிறிய சிங்களக் கட்சிகள் மற்றும் தமிழ்த்தேசியக் கட்சிகள் மீதும் சமூகவலைத் தளங்களில் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதால், அவர்களும் இச் சட்டமூல நகல் வரைபு தங்களுக்குப் பாதுகாப்பு என்று நம்பி அமைதியாக இருக்கின்றனர் போல் தெரிகின்றது.**

சுதந்திர ஊடக இயக்கமும் இது பற்றிக் கூறியுள்ளதுடன் சிறுவர்கள், பெண்களைப் பாதுகாப்பது என்ற சமூக உணர்வுகளை மக்களிடம் ஊட்டி அதன் மூலம் கருத்துச் சுதந்திரங்களையும் ஊடகச் செயற்பாடுகளையும் தமது விருப்பங்களுக்கு ஏற்ப மாற்றுவதே அரசாங்கத்தின் பிரதான இலக்கு என்று குற்றம் சுமத்தியுள்ளது.

மக்களைப் பாதுகாப்பதாகக் கூறிக் கொண்டு பொய்களை எதிர்க்கும் பெயரில் இருபத்து மூன்று முறை 'பொய்கள்' என்ற வார்த்தை நகல் வரைபில் காணப்படுகிறது.

ஆனால் 'பொய்கள்' அதனைத் தவிர்த்தல் என்ற பகுதி தெளிவில்லை. அதாவது அரசியல் விவகாரம் சார்ந்து ஒருவர் உண்மையை அல்லது நேர்மையாக விமர்சனம் செய்தால், முறைப்பாடுகளின் அடிப்படையில் அந்த விமர்சனத்தைப்'பொய்' என்று வரைவிலக்கணம் கொடுத்து அதனை எழுதிய நபருக்கு ஆணைக்குழு தண்டனை வழங்க முடியும்.

இது நியாயமான அரசியல் விமர்சனம் உள்ளிட்ட மாற்றுக் கருத்துகளைத் திட்டமிட்டு அடக்குவதற்கு, சட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயன்பாட்டின் அபாயத்தைப் பகிரங்கமாக வெளிப்படுத்துகிறது.

இது சட்டமாக நிறைவேற்றப்பட்டால், கொடுக்கப்பட்ட தகவல் உண்மையா அல்லது பொய்யா என்பதைத் தீர்மானிப்பது ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஐந்து நபர்களைக் கொண்ட இணையப் பாதுகாப்பு ஆணைக்குழுவுக்குரிய அதிகாரமாகிறது.

சில சமயங்களில் மஜிஸ்ரேட் நீதிமன்றத்துக்கும் பாரப்படுத்தக்கூடிய சில ஏற்பாடுகள் வரைபில் உண்டு.

ஆகவே இது இலங்கை அரசியல் யாப்பில் அடிப்படை உரிமையாக உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரத்தைக் கடுமையாகக் குறை மதிப்பிற்கு உட்படுத்தும் என்பதில் சந்தேகமேயில்லை.

அதேவேளை இணையவழிப் பொருளாதார செயல்முறைகள் பாதிக்கப்படுமென நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷா டி சில்வா தமோனிங்.எல்கே (**themorning.lk**) என்ற ஆங்கில செய்திச் சேவையிடம் சுட்டிக்காட்டுகிறார்.

உண்மை எது, பொய் எது என்பதை இணையப் பாதுகாப்பு ஆணைக்குழு மாத்திரமே தீர்மானிக்கும் உரிமையைக் கொண்டுள்ளது என்றால், இலங்கையில் இயங்கும் கூகுள் வரைபட நிறுவன செயற்பாட்டாளர்கள் வெளியேறும் ஆபத்துக்கள் நேரிடும் என்று அவர் எச்சரிக்கிறார்.

இலங்கைத்தீவு கூகுள் பயன்பாட்டு விடயத்தில் ஒரு சிறிய சந்தைதான். ஆனாலும் அனைத்துப் புதிய சேவைகளும் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டவை.

இதனால் கூகுள் செயற்பாட்டு வரைபடங்கள் இல்லாமல் பொருளாதாரம் எப்படி முன்னேற முடியும் என்று கேள்வி எழுப்பிய ஹர்ஷா டி சில்வா, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஐந்து நபர்களைக் கொண்ட ஆணைக் குழுவினால் கூகுள் ரீதியான பொருளாதார மைய இயங்கு தளங்களை கட்டுப்படுத்த முற்படுவது முட்டாள்தனம் என்றும் கூறியுள்ளார்.

இருந்தாலும் ஊடகம், சமூகவலைத்தளம் போன்றவற்றை இணையவழிப் பாதுகாப்பு என்ற போர்வையில் இச் சட்டம் எவ்வாறு கட்டுப்படுத்தும் என்பது தொடர்பாகப் பிரதான எதிர்க்கட்சிகள் மற்றும் ஜே.வி.பி போன்ற சிறிய சிங்களக் கட்சிகள் உருப்படியாகக் கருத்து தெரிவிக்கவில்லை. பகிரங்க எதிர்ப்பும் வெளியிடவில்லை என்பதுதான் கவலைக்குரியது.

இந்த நகல் வரைபுக்கு நாடாளுமன்றத்தில் எதிர்ப்புத் தெரிவிப்பது போன்று காண்பித்துவிட்டுப் பின்னர் வாக்கெடுப்பின்போது வெளியேறக்கூடிய நிலைப்பாடு பிரதான எதிர்க்கட்சிகளிடம் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

ஏனெனில் நாளை ஆளும் கட்சியாக வந்தால் அல்லது ஆளும் கட்சிக்கு ஒத்துழைத்தால் இச் சட்டமூலம் தங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்ற கருத்து அவர்களிடம் உண்டு.

ஜே.வி.பி போன்ற சிறிய சிங்களக் கட்சிகள் மற்றும் தமிழ்த்தேசியக் கட்சிகள் மீதும் சமூகவலைத் தளங்களில் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதால், அவர்களும் இச் சட்டமூல நகல் வரைபு தங்களுக்குப் பாதுகாப்பு என்று நம்பி அமைதியாக இருக்கின்றனர் போல் தெரிகின்றது.

ஆக ஊடகவியலாளர்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் சமூகவலைத்தளச் செயற்பாட்டாளர்கள் மத்தியில் இருந்தே எதிர்ப்புகள் அதிகரித்துள்ளன.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைபில் நிகழ் நிலைக்காப்புச் சட்ட வரைபை இணைக்கும் நோக்கம் ரணில் விக்கிரமசிங்கவிடம் இல்லாமலில்லை. (கூர்மை)

●